அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 7 இதழ் 8 விலை அ. 4	மன்மத ௵ கார்த்திகை மீ நவம்பர் - டிசம்பர்—1955	வருட சந்தா ரு. 2-4-0



அடியார்க்கு ஆடை உலர்த்தி அளிக்க மழையால்
முடியாமல் வருந்தித் தலைமோதும் திருக்குறிப்புத்தொண்டர்
(பெரிய புராணச் சித்திர விளக்கம் 20. பக்கம் 376)

பொருளடக்கம்

பக்கம்

1. அன்பே வாழ்வு அருளே செல்வம்; நோன்பே வினைவு பொருளே ஸோஹம் (திருப்புகழ்மணி) ... 337
2. சிவஞான சித்தியார் (இளவழகனார் விரிவுரைகள்) ... 340
3. கந்தர் அநுபூதி (கி. வா. ஜ.) ... 344
4. பாரத விஞ்ஞானம் (அ. ராமமூர்த்தி) ... 350
5. அறிவின் பெருமை (V. R. G.) ... 352
6. மங்களா சாஸனம் (அன்பன்) ... 355
7. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ... 359
8. யாதவ மன்னன் (ரசபதி) ... 365
9. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் (கி. வா. ஜ.) ... 376
10. ஆந்திர நோன்புக் கதைகள் (மஹி) ... 380
11. *The River and the Ocean* (*Thiruppugal Mani*) ... 383

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினால், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ௵ கார்த்திகை ௴ நவம்பர்—டிசம்பர்-1955	இதழ் 8

அன்பே வாழ்வு அருளே செல்வம்; நோன்பே நினைவு பொருளே ஸோஹம்

(திருப்புகழ் மணி)

அன்பற்ற வாழ்வு வாழ்வல்ல. பாழ் என்று உரைப்பர். அன்பினால் மாத்திரந்தான் ஆண்டவனை அடைய முடியும். ஆண்டவனை அறிவது உண்டானால், அன்பன்றி மற்ற எந்த அறிவுக்கும் அவன் எட்டான். அன்பின் அநுபவம் அறிவுதானே. அன்பை அறிந்தவர்கள் தங்கள் வாழ்வை அன்பின் ஓட்டமாகச் செய்திடுவார்கள்.

உலகுக்கெல்லாம் ஒன்றாய் நிற்கும் பொருளாம் கடவுள் அன்பின் மயம்தான். அவரிடம் அன்பின் நாடினால் அவர் அன்பும் நம்மை நாடும். அன்பன்

ஆறுமுக மாயுதித்த ஆறந்த அருட்சுடரே
கூறுடைய வேல்தரித்த கொற்றவநின் அடைக்கலமே.

அன்பு பக்தி. கடவுள் அன்பு அருள் என்பார்கள். ஊசியும் காந்தமும் போல் பரஸ்பரம் ஏற்பட நேசம் மாந்தருக்கு அருளாகும். அதுவே இகத்துக்கும் பரத்துக்கும் செல்வம் ஆம். அன்புக்கு முடிவில்லை. அருளுக்கும் முடிவில்லை. அழியாச் செல்வத்தை அடைகின்றூர்கள் அன்புடையவர்கள். இந்தத் தொலையாச் செல்வத்தை அடைவதற்கு ஒரு வழியுண்டு. அது ஒரு நோன்பு. அந்த நோன்பு என்னவென்றால் நினைவு தான்.

தேகோநாகம் ஜீவோநாகம்
ப்ரத்யக பின்ன ப்ரம்மைவாகம்
குருசரணம் பஜபவஹரணம்
ஸத்குரு சரணம் பவதரணம்

ஆண்டவனை நினைந்தவன் வாழ்பவன். மறந்தவன் இறந்தவன். நினைவே தவம் ஆகும். நினைந்திருப்பதை த்யானம் என்பார்கள்.

"மன்மனத்துள்ளே மகிழ்ந்திருப்போர்க்கு
மன்மனத்துள்ளே மனோலயமாகுமே"

என்றூர் திருமூலர்.

இரவுதனில் துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையும் உன் அழகுபுனை ஈராறு தோள் நிறையும்
இருபதமும் அறுமுகமும் யானோத
ஞானம் அதை அருள்வாயே

என்று ஸ்ரீ அருணகிரி பாடியுள்ளார். கருத்தை ஆண்டவனிடத்தில் நிறுத்தி உலகத்தில் செய்கின்ற காரி

மல்லிகை மஞ்சரி யார்ந்த மாணிக்க மஞ்சமதில்
வல்லி தெய்வ யானையுடன் மகிழ்வாயுன் அடைக்கலமே.

யங்களெல்லாம் ஆண்டவன் பூஜையாகக் கொள்ளுவதால், இதுவே ஸதா கால பூஜையாகும்.

> யாதொன்று நினைக்கின் யானது வாதலால்
> உன்னை நானெனன்று நினைக்கின்
> அத்துவிதம் கைகூடும்

என்று தாயுமானுர் உபதேசித்திருக்கின்ருர். உயிர்க்கு உயிராய் நிற்கும் ஈசனை உமக்குள்ளேயே நினைந்து நினைந்து வழிபட்டால், நினைக்கும் பக்தன் நினைப்பான தெய்வம் ஆய்விடுவதால், பொருளே ஸோகம் எனப்பட்டது. அகத்துள் வஸிக்கும் நான் வேறு, தெய்வம் வேறு என்ற வேற்றுமை கழிந்தால், தன்னுள்ளே தெய்வம் தோன்றும். உடனே தெய்வம் எங்குமே புலப்படுமே. அப்போது பொருள் அதாவது அந்த சத்தியப் பொருள், பக்தன் அனுபூதியில் காணலாம். தெய்வத்தை நினைத்து தெய்வமாக ஆவீர்கள் என்று வாழ்த்துகின்ருர்.

> ஹம்ஸஸ் ஸோகம் ஹம்ஸஸ் ஸோகம்
> ஹம்ஸஸ் ஸோகம் ஹம் ஸோகம்
> பரமாத்மாகம் பரிபூர்ணேகம்
> ஆனந்தோகம் ப்ரம்மைவாகம்.

சிவஞான சித்தியார்
(இளவழகனார் விரிவுரைகள்)

ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால் வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையன்
தரும் ஒரு வா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவு பகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும் ஒன்
றோஎன்னச் செய்யும் தேவே.

மெய்யன்பரீர் !

சிவனடியார் திருக்கூட்டத்தார்க்கு நீண்ட நாட்களாக இருந்த ஆவல் திருவருள் வலத்தால் இப்பொழுது கை கூடுகின்றது. சிவஞான சித்தியார் தொடங்குகின்றோம்.

இதனை இப்போது தொடங்கி வைத்த அருள்நேயத் திருவினர் சென்னை நகராண் கழகத்துணை ஆணையாளர் திரு. சங்கரன் எம். ஏ அவர்கள். அவர்கள் அன்பை நினைந்து உருகுவோம்.

உள்ளபடியே இச் சிவஞானத் தெளிவை முன்பு எல்லாம் வல்ல சங்கரன்தான் தொடங்கி வைத்தார். அவர் நந்தியெம் பெருமானுக்கு அருள, அவர் முறையே முனிவர்களுக்கு வழங்க, இப்படி சிவஞானபோதம் மெய்கண்டதேவர்க்குக் கிடைத்தது. அதை அருணந்திசிவம் ஏற்றுச் 'சிவஞான சித்தியா'ராகத் தம் பின்னோர்க்கு வழங்கினர். உமாபதி சிவம் 'சிவப்பிரகாச'மாக உலகுக்கு அளித்தார்.

ஆக, முதலில் இதனைத் தொடங்கி வைத்தார் யார்? சங்கரனே தான்!

* குறிப்பெடுத்து எழுதியவர் திரு. ஜி. பக்தவத்சலம்.

ஞானப் பழமேயென் நாயகனே நறுந்தேனே
கானமயில் ஏறும் கற்பகம்நின் அடைக்கலமே.

சிவஞான போதம் என்பது, சிவஞானத் தெளிவு. சிவஞானம், சிவத்தைப் பற்றிய உணர்வு. போதம் என்பது, அதைத் தகுதியுள்ள மாணவர்க்குப் போதிக்கின்றபோது அவர்களுக்கு உண்டாகுந் தெளிவு!

தாமே கற்பது வேறு. ஆசிரியன் தெரிவிப்பது வேறு. தாமே கற்பதில் அறிவு பெருகலாம். ஆனால் ஐயம் திரிபுகள் அகலா; ஆசிரியன் போதனையால் அவன் ஆற்றலும் சேர்ந்து பதிந்து ஐயந்திரிபுகள் தீர்ந்து தெளிவுமாகும்.

சிவஞானபோதம் உதவிய மெய்கண்ட தேவர் பெயரால் 'மெய்கண்ட நூல்கள்' என்று ஒரு தொகுதி உள்ளது. பதினன்கு நூல்களின் தொகுதி அது. அவற்றுள், சிவஞான போதமும் ஒன்று; அது தான் முதல் நூல்; அதன் வழி நூல் 'சிவஞான சித்தியார்'; 'சார்பு நூல் சிவப்பிரகாசம்'; ஆசிரியர் சிவஞானத்தை மாணவர்க்குப் போதிப்பார்; மாணவர் அதனைத் தகுதியாக வாங்கி வெற்றி யுற்றால், சிவஞானம் அவர்க்குச் சித்தியாகின்றது. அச் சிவஞான சித்தியில் நுகர்வு மிகும்போது சிவஞானம் அவரிடம் பிரகாசிக்கின்றது. நூல்களில் பெயர்கள் இந்த அடிப்படையில் உள்ளன.

இவையும் இவற்றைச் சார்ந்த ஏனை நூல்களும் 'சிவஞான போதம்' என்பதன் விளக்கங்களே. ஆனால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் விளக்கந் தருவது. அதனால், இப் பதினன்கு நூல்களையும் ஒருங்கே பயில்வது, தீர்ந்த தெளிவுக்கு நல்லது.

இவை யெல்லாவற்றுள்ளும் சிவஞான சித்தியார்தான் மிகவும் விரிவான, தோன்றும் ஐயந்திரிபுகளுக் கெல்லாம் விளக்கமாக விடையளித்துத் தெளிவு மிகுப்பதான பெரிய

சித்தர்கணம் போற்றும் சிவயோக தேசிகனே [கலமே
பித்தர்க்குப் பிரணவஞ்சொல் பெருமான்நின் அடைக்

நூல். சுருக்கமாக மெய்கண்டதேவர் அளித்த சிவஞான போதத்துக்குச் சித்தியார் விளக்கமான ஓர் உரை நூல் என்றே கூறலாம்.

இந்தப் பேரவைக்குத் தலைமை ஏற்று விளங்கும் பேராசிரியர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்கள், அரியதொரு முன்னுரை வழங்கினார்கள். சித்தியார் நூலிலுள்ள கருத்துக்களை நன்றாகத் தொகுத்து உரைத்தார்கள். என் கடமையில் ஒரு பகுதி அவர்கள் சீரிய தலைமையினால் நிறை வேறியது. மெய்கண்ட நூல்களில் தோய்ந்து தெளிவுற்றுத் திகழ்பவர்களே இந் நிகழ்ச்சிக்குத் தலைவராக வாய்த்தது ஒரு சிறந்த வாய்ப்பு! அவர்கள் நேரத்து தவிக்கும் தகுதிக்கும் நெஞ்சுருக்கங் கொள்வோம்.

மெய்கண்ட தேவர்க்குமுன், 'சிவஞான போதம் ஒரு நூலாக எழவில்லை. அருளால் வாய் மொழியாகவே வந்து, அவ்வருளுதவியால் அளவை வகையில் மெய்கண்ட தேவரால் சுருங்கிய நூல் வடிவம் பெற்றது; மாணவர் அதனை எழுதிக் கொண்டனர். முதலில் வாக்குத்தான் எழும்; எழுந்த வாக்கை எழுதிக்கொள்வதற்குத்தான், எழுத்து மேற்கொள்ளப்பட்டது. இப்போதெல்லாம் எழுத்து முதலாயிருக்கிறது; வாய்மொழியாய்ப் பேசுதற்குரிய கூட்டங்களிற்கூட முதலில் எழுதிக்கொண்டு அதன்பின் அதனையே படிப்பது வழக்காயிருக்கிறது. இது, எழுத்தாளர் காலம்!

நம்பிக்கைக்கும், நினைவுத் தொடர்புக்கும் எழுத்துப் பதிவே இன்று முக்கியமாய் உள்ளது. வாய்மொழியில் நம்பிக்கை அற்றுவருகிறது. கல்விபயிலும் மாணவர்க்கும் மனப்பாடமும் நினைவு வன்மையுங் குறைந்து எதற்கெடுத்தாலும் குறிப்பேடுகளும் நூற் சுமைகளுமாய் உள்ளன.

ஏழையடி யார்கள்தமை இன்பமுடன் காப்பதற்கு
மாழைமயில் ஏறிவரும் மன்னவநின் அடைக்கலமே.

இவையெல்லாம் எப்படியிருந்தாலும், வாக்கு முதலும் எழுத்துப் பின்புமாயிருந்தது. இப்போது தலைகீழாய் இருப்பதுதான் மிகவும் கவனித்தற்குரியது.

கனிவுள்ள அன்பர்கள், என்னை நோக்கி, 'நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். எழுத்திலும் கொண்டு வாருங்கள்' என்று அன்போடும் உரிமையோடும் விரும்பிச் சொல்லுகிறார்கள். வாக்கில் எழுகின்ற கருத்துக்கள் உயிர்ப்புற்றவை; எழுதும் போது அது தடைபட்டுத் தெற்றும். வாக்கில் வருகின்றவற்றைப் பிறர் எழுத்திற் கொண்டு வர வேண்டும். அப்போது எழுத்திலும் உயிர்ப்பிருக்கும். ஆனால் குறிப்புகள், நெறிமுறைகள், பொருளுண்மைகளெல்லாம் சரியாய் இருக்க வேண்டும். இந்த முறையில் எழுத்துக்கள் பல வரலாம்; வரவேண்டுந்தான்; முன்னும் இப்படித்தான் வந்தது. இருந்து எழுதுவது, பேச்சினுங் குறைவுதான். இலக்கணங்களானால் சுருக்கமாய் இருந்தெழுதலாம்; இலக்கியமானால், அதற்கு நிகழ்ச்சி யொழுக்கம்வேண்டும்; வாக்கில் அது நன்கு அமையும்; சிறக்கும். பழைய சங்க இலக்கியங்களில், தனிப் பாடல்கள் சிறந்த ஊட்ட முற்றவை; அவை பெரும்பாலும் வாய்மொழிகளில் வந்து பின்பு எழுதப்பட்டவையே. புறநானூற்றுப் பொன்மொழிகளை இங்கு நினைவு கூரலாம். அவை பெரும்பாலும் நிகழ்ச்சிப் பாட்டுகள்; நேருக்குநேர் இருந்து வாய்மொழியாய்ப் பேசியவை. இடைக்காலத்திலும், தேவார ஆசிரியர்கள் தம் செம்பொருட் பாட்டுகளை எழுதியவர்கள் அல்லர். இறைவன் திருமுன் நின்று தம்மை மறந்து அருளுணர்ச்சி திளைத்துப் பாடியவை. இலக்கியம் அங்கிலேயிலேதான் சிறக்கும். அன்பர்கள் அவற்றை ஏட்டில் எழுதினர்.

இம்முறையினால் தமிழுலகுக்குக் கிடைத்த எழுத்துக் களஞ்சியமும் ஏராளம்; உயிர்ப்பு மிக்க இலக்கியமாகவும் அவை திகழ்கின்றன.

அருணை நாதர் விளிக்க அப்பொழுதே வந்தவனே [மே
கருணைகூர் பன்னிரண்டு கண்ணுேய்நின் அடைக்கல

மெய்கண்ட தேவ நாயனாரால் சுருங்கிய நூல் வடிவில் எழுந்த சிவஞான போதம், இம் முறையினால் வெறும் ஏட்டளவில் நில்லாது, மாணவர் உணர்வு கவர்ந்து ஒழுகு வதாயிற்று. தலை மாணவர் அருணந்தி சிவத்தின் பால் அது சித்தித்தது; 'சிவஞான சித்தி'யாயிற்று. (தொடரும்)

கந்தர் அநுபூதி

கி. வா. ஜகந்நாதன்

(310-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணத்தை அறிவதிலே வண்டுகள் மிகச் சிறந்தன என்பதை இந்த இரண்டு உதாரணங்களும் காட்டுகின்றன. நல்ல வாசனை உடைய மலரை நாம் "நல்ல மணமுடையது" என்று சொல்லுவதைவிட, வண்டு வந்து மொய்ப்பதினாலே, உண்மையில் இது மணமுடையது என்று தெரிந்து கொள்ளலாம்.

இங்கே அருணகிரிநாதர் கட்டும் சொல்மாலையில் ஞான மணம் இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளும்படி எந்த வண்டு மொய்க்கும்? அதை அவர் சொல்லுகிறார்; கேட்கலாம்.

"ஒரு ஞானவாசம் வீசிப் பிரகாசியா
நிற்ப, மாசிலோர் புத்தி அளிபாட"

'குற்றமற்ற சாதுக்களுடைய புத்தியாகிய வண்டுகள் இதில் மொய்க்க வேண்டும். என்னுடைய பாட்டை நானே பாடிக்கொண்டு, 'அடடா, எப்படி அழகாகப் பாடியிருக் கிறேம்' என்று சொன்னால் போதாது. உன்னுடைய புகழாகையினாலே நீயும் அதைப் பாராட்டலாம், என்னிடத் திலே உள்ள கருணையினால். ஆனால் உண்மையான சாதுக் கள் தம்முடைய அறிவினால் நன்கு ஆராய்ந்து, "இது நன்று நன்று" என்று சொல்லவேண்டும்' என்கிறார்.

பத்தர்மனத் தொளிர்மணியே பகரரிய தனிமணியே
சித்தர்புகழ் சிவமணியே சின்மயநின் அடைக்கலமே.

"மனமாகிய தாமரையைக் குஞ்சமாக வைத்து, சொல் மலர்களையெல்லாம் அன்பாகிய நாரினலே கட்டி, மிகமிக அழகாகவும் விளக்கமாகவும் கட்டியிருக்க, அதில் ஞான மாகிய மணம் வீசவேண்டும். அந்த ஞான மணத்தைக் கண்டு பெரியோர்களுடைய உள்ளங்களாகிய வண்டு களெல்லாம் மொய்க்க வேண்டும். அப்படி ஓர் அழகான பூமாலையை உன்னுடைய பவளம் போன்ற திருவடிக்குச் சாத்தவேண்டும்" என்று அருணகிரிநாதர் ஆசைப் பட்டார்.

"ஆசை கூர் பக்த னேன்மனே பத்ம மானபூவைத்து
[நடுவே அன்
பான நூ லிட்டு நாவிலேசித்ர மாகவே கட்டி ஒருஞான
வாசம்வீ சிப்பிர காசியா நிற்ப மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோ லப்ர வாள பாதத்தில்
[அணிவேனே?"

மாத்ருகா மாலையென்பது நெடுங்கணக்குக்குப் பெயர்; எழுத்துக்களின் வரிசைக்குப் பெயர்;' தமிழ் மொழியினலே அழகாக ஒரு மாலை இயற்ற வேண்டும்! அது இதற்கு முன்னலே இல்லாததுபோல இருக்கவேண்டும். பெரியவர் களெல்லாம் இது சிறந்த மாலையென்று சொல்லவேண்டும்; அவர்களும் உன்னைப் புகழ்வதற்குப் பயன் படுத்தவேண் டும்' என்று ஆசைப்பட்டார். அந்த ஆசை தந்நலமற்ற ஆசை. இறைவனுடைய புகழை நினைந்த ஆசை. ஆகையினல் அது பல்லாயிரம் மடங்கு பயன் பெற்றது.

அருணகிரிநாதர் ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடி யிருந்தாலுங்கூட, மாத்ருகா புஷ்பமாலை ஒன்று பாட வேண்டுமென்று நினைத்தார். எழுத்துக்கள் ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு வகையாக இருக்கின்றன. ஆனல் எல்லா வகை எழுத்துக்களும் அமைந்தது சம்ஸ்கிருதம் என்று சொல்லலாம். அதில் எழுத்தொலிகளை ஐம்பத் தொன்ருகச் சொல்லுவார்கள். 'ஐம்பதொரு விதமான

லிபிகளும்' என்று அருணகிரிநாதரே பேசுகிறார். ஐம்பத்தோர் அட்சரங்கள் உள்ள நெடுங்கணக்கான மாத்ருகா புஷ்பமாலை என்று சொன்னார். எழுத்து மாலை அது. எழுத்து மாலையாக நான் பாட்டுப் பாடவேண்டுமென்று அவர் நினைத்தார். அந்த எழுத்தையே வைத்து அல்ல. ஐம்பத்தொரு பாட்டுக்கள் அமைந்த மாலையையே **மாத்ருகா புஷ்பமாலை** என்று சொல்லலாம். அஞ்சு பாட்டுக்கள் அடங்கிய நூலைப் பஞ்சரத்தினம் என்று சொல்லுவார்கள். அந்தப் பாட்டிலே இரத்தினமா கோத்திருக்கிறார்கள்? இல்லை. பஞ்சரத்தினம் என்ற வரிசையை நினைப்பூட்டுகிறது அது. அப்படியே **நவமணிமாலை** என்று சொல்லுவார்கள், ஒருவகைப் பிரபந்தத்தை. ஒன்பது மணிகளமைந்தது போல வெவ்வேறு பாடல்கள் அமைந்தது ஆதலின் அப்பெயர் வந்தது. அதே மாதிரி ஐம்பத்தொரு பாடல்கள் அமைந்திருந்தால் அதனை **மாத்ருகா புஷ்பமாலை** என்று சொல்லலாம். "நான் பெரியவர்கள் விரும்பும்படியாக ஞான மணம் வீசுகின்ற ஐம்பத்தொரு பாடல்களால் ஒரு மாலை பாடவேண்டும்" என்று நினைத்ததாகவே அந்தப் பாட்டுக்கு அர்த்தம் சொல்லலாம். இறைவன் திருவருளினாலே அப்படி ஒரு மாலையை, ஞான மணம் வீசும் மாலையை, **கந்தர் அநுபூதி** என்ற பெயரோடு அருணகிரிநாத சுவாமிகள் பாடினார்.

அவர் பாடின திருப்புகழ், கந்தரலங்காரம், திருவகுப்பு முதலியவைகளைக்காட்டிலும், கந்தர் அநுபூதியிலே அநுபவ வாக்கு மிகுந்திருக்கும். பலகாலம் இறைவனுடைய திருவருளில் ஊறித் தலங்களுக்கெல்லாம் சென்று அவனைப் பாடிப்பாடி, அதனால் உண்டான அநுபவத் தெளிவிலே கடைசியில் பாடியது கந்தரநுபூதி. அதைப் பற்றி ஒரு கதைகூட உண்டு. அருணகிரிநாதப் பெருமான் இந்த உடலத்தோடு மற்றவர்களைப்போல இறந்துபடவில்லை. திடீரென்று மறைந்து விட்டார். மறையும் பொழுது கிளியாக மாறினார். அந்தக்கிளி உருவத்திலே இறைவனுடைய திருக்கரத்திலே இருந்தார். அப்படி

பழனிமலைக் குகனே பார்புகழும் கண்ணியனே
குழந்தைவடி வேலோய்சற் குன்றேநின் அடைக்கலமே

இருந்தபடியே அவர் அநுபூதி பாடினாராம். இந்தக் கதையை நம்பினாலும் நம்பாவிட்டாலும் சரி; இதன் ஊடே ஒரு கருத்து இருக்கிறது. கிளியென்றால் நமக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்ற பழமொழி தமிழிலே வழங்குகிறது. கிளி தானாகப் பேசத்தெரிந்து கொள்வதில்லை. யாராவது ஒருவன் சொன்னால் சொன்னதைச் சொல்லும். அருணகிரிநாதர் உலகிலே இருக்குமட்டும் பௌதிக சம்பந்தத்தினாலே தாமே நினைத்துப் பாடினார். இறைவனுடைய அருள் அதற்குத் துணையாக இருந்தது. பிறகு, இந்தப் பௌதிக உலகத்தை விட்டுச் சென்றார். அவருடைய உடம்பு மாறியது. இறைவனுடைய திருவருள் மயமான உடம்பிலே அவனுடைய திருக்கரத்திலே நின்றார். அப்பொழுது அந்தக்கிளி பேசியது. கிளியா பேசியது? கிளிக்குப் பேசத்தெரியாது; சொன்னதைத்தான் சொல்லும். இறைவன் சொன்னான். அதை அப்படியே அவர் பாடினார். அதற்கு முன்னாலே பாடிய பாட்டில் மனித உள்ளம் இருக்கும். ஆனால் கந்தரநுபூதியிலே இறைவனே வந்து பாடினால் எப்படியிருக்குமோ அப்படியுள்ள செய்திகளெல்லாம் நிரம்பியிருக்கின்றன. இறைவன் சொன்னதை அருணகிரிநாதர் சொன்னார். எந்த நிலையைச் சொன்னார்? பௌதிக உடம்பை மாற்றி, அல்லது இந்த உலகம் என்ற நினைவு இல்லாத சுகசொரூபமாக நின்ற பொழுது, இறைவனுடைய மயமான ஒரு நிலையில் பசு கரணங்களெல்லாம் மாறிப் பதி கரணம் ஆனபொழுது, பாடிய பாட்டு கந்தரநுபூதி. அதனைத்தான் கதையாக, கிளி உருவாக இருந்தபொழுது, இறைவனுடைய திருக் கரத்திருந்து பாடினார் என்று சொன்னதாகக் கொள்ளலாம். அதை நம்புகின்ற பக்தர்களும் இருக்கலாம். அதைப் பற்றி நமக்கு ஆராய்ச்சி வேண்டாம். ஒன்று மாத்திரம் நிச்சயம். அவர் பாடிய ஏனைய பாடல்களைக் காட்டிலும் கந்தர் அநுபூதி ஞான மணம் நிரம்பியதாக, இறைவனுடைய திருவருட்செறிவை மிகமிக நன்றாக விளக்கு

திருப்பரங் கிரிவாழும் திருஞான போதா
திருமால் மருகோனே தேவா நின் அடைக்கலமே.

வதாக இருக்கிறது என்பதை மாத்திரம் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்தில் இலக்கிய ஆராய்ச்சி செய்கின்றவர்கள் மேல் நாட்டு முறையிலே 'கிரிடிஸிஸம்' என்று இலக்கிய விமர்சனங்களைச் சொல்லுகிறார்கள். அவர்களெல்லாம் தெள்ளத் தெளிவாக, பச்சை பச்சையாக, உள்ளதை உள்ளபடியே சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுகிற வழக்கம் நம்முடைய நாட்டில் இல்லை. ஒரு பாட்டு நன்றாய் இருக்கிறது. அந்தப் பாட்டிலே ஓர் அடி மிக நன்றாகயிருக்கிறது என்றால் அதற்கு அவர்கள் ஒரு கதையைச் சொல்லுவார்கள். அந்தப்பாட்டை இறைவனுடைய திருமுன்னர்ப் பாடினதாகவும்,குறிப்பிட்ட அடி வந்தபொழுது இறைவன் ஒரு மாலையை அந்தப் புலவருடைய கழுத்திலே போட்டதாகவும் ஒரு கதையைக் கட்டுவார்கள். அந்தக் கதையினுடைய தாத்பர்யம், உண்மையாக அப்படியெல்லாம் நடந்தது என்று தெரிவிப்பது அன்று. நூலிலே உள்ள அத்தனை பாடல்களையும் படிக்கும் பொழுது குறிப்பிட்ட பாடலிலே மனிதன் நிற்க வேண்டும். அந்தப்பாடலிலே குறிப்பிட்ட அடியிலே சுவையைக்காணவேண்டும் என்ற கருத்துத்தான். சுவையுணர்வார் நிச்சயமாகக் காண்பார். இதிலே மிகுந்த சுவை இருக்கின்றது என்று மேல் நாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுவார்கள். "இத்தனை பாட்டிலும் இந்தப் பாட்டு இன்ன காரணத்தினாலே மிகுந்த சுவையுடையது. அந்தப் பாட்டுக்குள்ளும் இன்ன அடி மிகுந்த சுவையுடையது" என்று எழுதுவார்கள். நம்முடைய நாட்டவர்கள் அப்படி எழுதுவது வழக்கம் இல்லை. இந்தப்பாட்டைச் சொல்லும் பொழுது, இந்த அடியைச் சொல்லும்பொழுது இறைவனே மகிழ்ந்தான் என்று சொன்னால், தெய்வபக்தியினாலேயே உலகத்தை அளக்கின்ற இந்த நாட்டினருக்கு அந்தப்பாட்டிலும் அடியிலும் பக்தி உண்டாகும். இப்படி எத்தனையோ கதைகள் உண்டு.

அந்த வகையில் அருணகிரிநாத சுவாமிகளுடைய திருப்பாடல்களையெல்லாம் ஆராய்ச்சிக்காரர் எடுத்துக்

செந்தில்வளர் வேலா செற்றார்க்குக் காலா
சுந்தரியாள் பாலா சுப்ரமண்யா அடைக்கலமே.

கொண்டார். அவர் ஆராய்ச்சிக்காரராக மட்டும் இருந்தால், "அவர்பாடிய மற்றப் பாடல்கள் எல்லாம் உலக மணம் வீசுகின்றது" என்று எழுதியிருப்பார். ஆனால் அவர் வெறும் ஆராய்ச்சிக்காரர் அல்ல. முருகனுடைய அடியார். அருணகிரிநாதருடைய அடியார். பாரதநாட்டுப் பண்பு அது தானே? இறைவனுடைய பக்தியில்லாமல் கல்வியும் ஆராய்ச்சியும் இல்லை. தமிழ் ஆராய்ச்சி இல்லை. எத்தனை இலக்கணங்கள் படித்திருந்தாலும், இலக்கியப் பெருங்கடலில் நீந்தி அதனாலே உண்டான இன்பத்தில் திளைத்து நின்றாலும் இறைவனுடைய பக்தி என்ற ஒரு சுருதியிலே ஒன்றுபட்டு அநுபவிப்பதே சிறந்த ஆராய்ச்சி என்று நினைத்தார்கள்.

அருணகிரிநாதப் பெருமானுடைய இன்ப அநுபவச் செஞ்சொற் பொழிலூடே சென்று, கடல்போல இருக்கின்ற விரிவான பாடல்களிலே துளைந்து ஆனந்த மடைந்த ஒரு பெரியார், கந்தரநுபூதி எல்லாவற்றிலும் சாரமாக இருக்கிறது என்பதைக் கண்டார். ஒவ்வொரு பாட்டும் ஆயிரம் பாடல்களாக விரிப்பதற்குரிய அற்புதமான பொருளை உள்ளடக்கி வைத்திருக்கிறது என்பதையும் பார்த்தார். சாமானியமாகச் செந்தமிழ்ப் புலமைப் பெற்று நல்ல கவித்துவத்தை அடைந்து பாடுகின்ற பாட்டு அன்று அது. இறைவனுடைய திருவருளினாலே பலகாலம் அந்த அருட்கடலிலே ஊறி ஊறி இன்ப அநுபவத்தைப் பெற்றுத் தேக்கு எறிந்த பின்பு வருகிற பாட்டு அது என்று கண்டார். "அருணகிரிநாதர் பாடிய பல நூல்களுக்குள்ளே கந்தரநுபூதி மிகச் சிறந்தது" என்று சொல்லவந்தார். ஆனால் அப்படிச் சொன்னால் பாரத நாட்டு மக்களுடைய உள்ளத்திலே பதியாது. கோவிலையும் கோபுரத்தையும் தினந்தோறும் விழித்தவுடன் பார்க்கும் தமிழனுடைய உள்ளத்தில் அப்படிச் சொன்னால் அது அழுத்தமாகப் பதியாது. அதனால் அவர் ஒரு கதை கட்டினார்.

(தொடரும்)

சாமிமலை நாதா நல் சத்வகுண போதா
தோமிலாத தேவாமெய்த் தூயாஉன் அடைக்கலமே

பாரத விஞ்ஞானம்

(அ. ராமமூர்த்தி)

மேல் நாட்டு விஞ்ஞானத்திற்கும் நமது பாரத விஞ்ஞானத்திற்கும் அடிப்படையான பல வேற்றுமைகள் உண்டு. "விஞ்ஞானம்" என்ற பதத்திற்கு நாம் காணும் பொருளைப் பொறுத்துத்தான் இந்த வித்தியாசத்தை நாம் தெளிவாக உணர்தலும் இருக்கிறது.

அகண்டமான அறிவுக்குத்தான் (விக்-ஞானம்) விஞ்ஞானம் என்று பெயர். அதற்கு அப்பாலும் அறிய வேண்டிய ஒன்று இல்லாத நிலையில்தான் அறிவு அகண்டமாகிறது.

மேல் நாட்டு விஞ்ஞான அறிவு வெறும் பொருளியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. பூதபௌதிக ஆராய்ச்சிக்கு அப்பால் செல்லும் வலிமையற்றது. புள்ளி விவரங்களையே சாஸ்திரமாகக் கொண்டது. பொருள்களை அலசிப் பார்ப்பதையே தொழிலாகக் கொண்டது. பொதுவாகக் கூறுமிடத்து அணு அணுவாக (சில்லறையாக) பகுத்துப் பார்ப்பதைத் தவிர அணுவுக்கும் ஆதாரமான ஒன்றைத் தொகுத்துப் பார்க்கும் தன்மையற்றது. முற்றிலும் உலகாயதமானது.

பாரத விஞ்ஞானம் பொருளியல் தத்துவத்திற்கு முரண்பட்டதல்ல வென்றாலும், எல்லாவற்றிற்கும் ஆதாரமான முழுமுதற் பொருளையே காணும் அடிப்படையைக் கொண்டது. நமது விஞ்ஞானத்தில் அணு உண்டு. ஆனல் அந்த அணு அகண்டத்தைக் காட்டுவதற்கே உபயோகப்படும். பகுத்துப் பார்க்கும் முறையைத் தவிர்த்து விஷயங்களைத் தொகுத்து அறியும் தரத்தைக் கொண்டது.

குன்றுதோறும் குதித்துக் குறைபலவும் தீர்ப்போனே
மன்ருடி மைந்தாவுன் மகிமைக்கு அடைக்கலமே.

பரம்பொருளைத் தவிர ஏனைய எல்லாமே அநித்யம் என்று தெளிவாகத் தீர்மானித்து நித்தியத்தை நோக்கி மட்டுமே திரும்புவது. நமது விஞ்ஞானம் எந்த ஒன்றையும் "அது நித்தியமானதா!" என்ற அளவுகோலாலேயே ஆராய்கிறது. உலகமே அநித்யம் என்று தொகுதியாகத் தெரிந்து கொண்டுவிட்ட காரணத்தால் தான் பாரத விஞ்ஞானம் முற்றிலும் ஆன்மீக தத்துவ மயமாயிருக்கிறது. ஏனென்றால் அநித்யப் பொருள்களை ஆராய்வதற்கும் பிரேதங்களைப் பிழைக்க வைக்கும் முயற்சிக்கும் அதிக வித்தியாசமில்லையல்லவா ?

"எது விஞ்ஞானம்" என்று தீர்மானித்து விட்டால் "விஞ்ஞானி யார் ?" என்ற கேள்விக்கும் விடைகிடைத்து விடும்.

ரயில் ஓடுவதையும், விமானம் பறப்பதையும், யந்திரங்கள் வேலை செய்வதையும் விஞ்ஞான சாதனை யென்று நான் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. ஏனெனில் இவற்றைச் செய்ய வெறும் உலகாயத அறிவே போதுமானது.

நிலையான ஒன்றை, ஆழங்காண முடியாத ஒன்றை, அறிவையே கூட அநித்தியமாக்க வல்ல ஆழ்மையான ஒன்றை நோக்கி நம்மை அழைத்துச் செல்ல வல்ல ஆத்ம ஞானம் ஒன்றே உண்மையான விஞ்ஞானமாகும்.

இந்த அடிப்படையில் பார்த்தால், நமது பாரத நாட்டில் ஆதிகாலத்திலிருந்து இன்று வரை விஞ்ஞானிகளுக்குக் குறைவேயில்லை. கணக்கிலடங்காத மகான்களும் ரிஷீஸ்வரர்களும் அவ்வப்போது தோன்றி பாரத விஞ்ஞானத்தை வளர்த்திருக்கிறார்கள். சுருங்கச் சொன்னால் பாரத நாடு முழுவதுமே ஒரு விஞ்ஞான கூடம்தான்!

இந்த விஞ்ஞான கூடத்திற்கே கோடிக் கணக்கான பணம், ஆராய்ச்சி சாதனங்கள், யந்திரங்கள், வானளாவிய

சோலைமலை வாழும் தூயவர்கள் நேசமுளாய்
பால வடிவான பரம்பொருள்நின் அடைக்கலமே.

கட்டிடங்கள் எதுவுமே தேவையில்லை. ஒன்று வேண்டும். அதுதான் நித்யாநித்ய விவேகம். "நான் யார்?" என்ற முதல் கேள்வி நித்தியாநித்ய விவேகத்தைப் படிப்படியாக அடையச் செய்யும்.

பாரத விஞ்ஞானிக்குப் பண்பாடே இலட்சணமாகும். திறந்த மனமும் பரந்த உள்ளமுமே உடைமைகளாம். சத்தியமே சாதனையாகும். இவற்றால் அவன் அடையும் முழுப் பேறு பரம்பொருளோடு இரண்டறக் கலத்தலே யாம் (மோட்சம்). அப்பொழுது தான் அவன் "விஞ்ஞானி" என்ற பட்டத்திற்குத் தகுதி வாய்ந்தவன்,

நமது இந்த விஞ்ஞானம் உலகை அழிக்காது. புகையையோ நெருப்பையோ கக்காது. அதற்கு மாறாக அமைதியையும் ஆனந்தத்தையும் நிரந்தரமாக்க வல்லது.

எந்த விஞ்ஞானம் நமக்குத் தேவை ?

அறிவின் பெருமை

(V. R. G.)

திருமுருகன் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஒவ்வொருவித சாமர்த்தியமான செயலைக் கொடுத்திருக்கிறான். அது அவைகளின் இயற்கைக் குணமாகவே அமைந்திருக்கின்றன. அதன் கூடவே அதன் சாமர்த்தியமும் ஜனிக்கின்றது. அதிவேகமாய் ஓடுவதில் மானை ஜெயிக்க ஒரு பிராணியுமில்லை. தந்திரத்தில் நரிக்கு மிஞ்சிய தொன்றுமில்லை. பலத்தில் யானையும், தைர்யத்தில் சிங்கமும் தமக்கு நிகரின்றி விளங்குகின்றன. அழகில் மயிலும், குரலில் குயிலும் இணையற்றவைகள். தளராத ஊக்கத்திலும், சுறுசுறுப்பிலும் எறும்புகளை ஒத்த ஜந்துக்கள் இல்லை.

ஓம்பொருள்தான் ஆனவனே ஓதற் கரியோனே
சாம்பசிவன் புத்திரனே சண்முகவுன் அடைக்கலமே.

அந்த சாமர்த்தியங்கள் அவைகளால் தானுகவே உண்டாக்கிக் கொள்ளப்பட்டவைகள் அல்ல. அவைகள் பிறக்கும் பொழுதே அதனுடன் வந்த பிறவிக்குணங்களாம். அந்த சாமர்த்தியங்களுக்காக அவைகள் கர்வப்படவோ, தலைக்குமேல் அகம்பாவம் கொண்டு தன்னைப் புகழ்ந்து பேசவோ சிறிதும் ஞாயமில்லை. அவைகள் அப்படி கர்வம் கொள்ளவுமில்லை. ஆண்டவன் இட்ட நியதிப்படி நடந்து நிம்மதியுடன் வாழ்கின்றன.

திருமுருகன் இவ்விதம் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு சாமர்த்தியங்களை எதற்காகக் கொடுத்தான்? தன் ஆகாரத்தை யாதொரு தடங்கலுமின்றி தேடிக்கொள்ளவும், சத்துருக்களிடமிருந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டு, நிர்ப்பயமாயும் நிம்மதியாயும் வாழவும், தானும் மகிழ்ந்து, தன்னைப் படைத்தவனையும் மகிழ்விக்கவேயாம்.

நியதியோடு வாழின் நிம்மதி ஏற்படுகிறது. நிம்மதியே எல்லையற்ற ஆனந்தமாம். ஆனந்தமே மகிழ்ச்சி. எந்த நோக்கத்துடன் ஆண்டவன் நம்மைப் படைத்தானே அந்த நோக்கப்படியே நாம் நடந்தால் அதைக்கண்டு அவனும் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதித்து அருள் புரிகிறுன்.

சகல ஜீவராசிகளும் தனக்குக் கொடுத்த சக்தியைச் சிறிதும் வீணுக்குவதில்லை. சமயா சமயமறிந்து அந்த சக்தியை அளவுடன் உபயோகித்து அளவற்ற லாபத்தையும் ஆனந்தத்தையும் அடைகின்றன. அந்த சக்தியைத் தம் உயிர்த்துணையாக, மதித்து நேசித்துக் காப்பாற்றுகின்றன.

மனிதன் எனும் ஜீவனுக்கு உயிர்த்துணையாகத் திருமுருகன் எதை அளித்திருக்கிறுர்? தெரியுமா? மனிதஜன்மமே சகல ஜீவராசிகளுக்கும் உயர்ந்ததாயும், நிகரற்றதாயும் விளங்க வேண்டுமென்பது அவன் விருப்பம். ஆதலால் மனிதனைப் படைக்கும் பொழுது அவனுடன் "அறிவு" என்னும் உயர்ந்த அணையா விளக்கைக் கொடுத்திருக்கிறுர். அதனுடைய பெருமையையும், சக்தியையும் எவராலும்

ஆறுமுக வேலவனுய் அமரரிடர் தீர்த்தோனே
நீறணிந்த மெய்யா நிமலாவுன் அடைக்கலமே.

வர்ணிக்க இயலாது. ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு சக்தியைத்தான் பெற்றிருக்கின்றது. அறிவின் உதவியைக் கொண்டு மேலே கூறியுள்ள நானாவித சாமர்த்திய சக்திகளையும், ஏககாலத்தில் ஒருவனே அடையலாம்.

ஆகாயத்தில் பறக்கலாம்! பெரிய சமுத்திரங்களையும் அதிவேகத்தில் கடந்து செல்லலாம்! நெடுநேரம் நீரில் மூழ்கியிருக்கலாம். அனல், நீர், காற்று முதலியவைகளை நம் நன்மைக்கென ஏவல் புரியும்படி செய்து கொள்ளலாம். பல்லாயிரம் ஜனங்கள் சேர்ந்து சாதிக்கவேண்டிய காரியங்களை ஒரு தனிமனிதனே சுலபமாய்ச் செய்து முடிக்கலாம். கண்டும் கேட்டும் இராத அநேக அற்புதச் செயல்களைச் செய்து காட்டலாம்.

இவைகளெல்லாம் மனிதனால் முடியக்கூடிய காரியமா? எனக்கேள்வி எழலாம். சிறிது யோஜித்தால் யாவும் உண்மையெனத் தோன்றும். மேற்கூறிய அதிசய செயல்களையெல்லாம் மேனாட்டினர் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே தங்கள் அறிவின் துணைகொண்டு சலியா ஊக்கத்துடன் உழைத்து, கண்டுபிடித்து அனுபவித்து வருகின்றனர். அவர்கள் மாந்திரீக சக்தியாலோ, அல்லது தெய்வ பலத்தாலோ திடீரெனக் கண்டுபிடித்து விடவில்லை. கடவுள் அளித்த அறிவின் துணைகொண்டே சாதித்தார்கள். அரிய பெரிய சாதனைகளை, ஒருவனால் தனியாகச் செய்து விடமுடியாது என்பதை நன்கு உணர்ந்தவர்கள் ஆதலால், அவர்களிடம் ஒற்றுமையும், ஊக்கமும், உழைப்பும் பூரணமாய் இருக்கின்றன. ஒரு விஷயத்தைக் கண்டுபிடிக்கப் பல தலைமுறைகள் ஆனாலும் அவர்கள் முயற்சியை விடுவதில்லை.

அவர்கள் அறிவின் உழைப்பின் பயனால் அடைந்த சௌகர்யங்களை நாமும் இன்று அநுபவித்து வருகிறோம் என்பதை மறுக்க முடியாது. அறிவு உள்ள இடத்தில் அசிகையோ, அவநம்பிக்கையோ இராது. அறிவு செய

சரவணத்தில் தோன்றிச் சைலம் பிளந்தாய்
தரணிசுரர் போற்றஅருள் தருவாய்நின் அடைக்கலமே

லாற்றும் இடத்தில் அமைதி குடிகொண்டிருக்கும். வெற்றியைத் தவிரத் தோல்வி இல்லை. எவ்வித கஷ்டகாலத்தையும் நீக்கி நம்மைக் காப்பாற்றக்கூடிய சக்தி அறிவிற்கு உண்டு.

நாம் சதா மகிழ்ச்சியுடனும் நிர்ப்பயமாயும், யாதொரு குறைவுமின்றி வாழவேணுமென எண்ணியே அறிவெனும் துணையை ஆண்டவன் நமக்களித்திருக்கிறார். ஆதலால் மனிதனுடைய ஆதிக்கத்தில் செயலற்றதாய் சிறைபட்டிருக்கும்படி நம் அறிவை விட்டுவிடாமல் சதா திருமுருகனைத் துதித்து அறிவின் பூரண விடுதலைக்கு வழிகாண வேண்டும்.

அறிவாகமும் பெருக இடரானதுந் தொலைய
அருள்ஞான இன்பமது, புரிவாயே

(திருப்புகழ்)

திருப்பல்லாண்டு 7.

மங்களா சாஸனம்

(அன்பன்)

பிறப்பான். வளர்பிறை யென்று வளர்வான். பதினாறு கலை பெற்ற பவுர்ணமி யென்று ஆவான். அதன் பின் அவன் வாழ்வு தேய்பிறை. இறுதியில் மறைந்து விடுவன் அந்த மதியவன். திங்கள்தோறும் நேர்கிறது இத்தீர்ப்பு.

உவந்து காலையில் உதிக்கின்றான். கடும்பகல் என்னக் காய்கின்றான். மாலையே மாயுங் காலமாகி மறைகின்றான். பரிதி விஷயமாக, நாள்தோறும் விளைகிறது இந்நடப்பு.

பெரிது முயன்றால் பிறக்கின்றது நெருப்பு. செயற்கை உறவால் சிலிர்க்கின்ற அக்கனல், வீழும் நீரால் ஆறி அடங்கும்.

சாமிகுரு ஆகும் சகலகலை வல்லவனே
பூமாதின் மருகனெனும் பூரணவுன் அடைக்கலமே.

இனிய ஒளிப் பொருள் இம்மூன்றுனும், படரும் லௌகிகத்திற்குப் பயன். மலர்ந்து மங்கி மறையும் இவைகள், எல்லாம் தனதென்னும் மமகார இருளை மாய்க்காது. அதை எண்ணித்தான், இவைகளில் நம் இலட்சியம் இல்லையென்கிறேன்.

சந்திர சூரிய அக்கினி மூன்றினும் பரந்த ஒளியாகிச் சிறந்தான். அநியாய துஷ்ட இருளை அழிக்கின்றான். ஆழியே கோயிலாக அமர்கின்றான். எம் பெருமான் குணக்கடலில் ஆழ்கின்றான். வெற்றிக் குறியாகி வரதனது வலத் திருக்கரத்தில் வாழ்கின்றான். அந்தத் திருவாழி ஆழ்வான் அமரும் தலமான சக்கர அடையாளத்தைத் தோளின் பொறித்த தொண்டர்கள் நாம். இறைவனுக்குப் பணி செய்யும் இன்பப் பரம்பரையில் இருப்பவர்கள் நாம். அப்படியிருந்தும், மாபெரும் ஒன்றை இத்துணை காலமாக மறந்தோம் சொல்கின்றேன் கேளுங்கள் !

பழைய கதை

பலியின் வழி வந்தவன் பாணன். இந்த அசுரன், இறுமாந்து சோணித புரத்தில் இருந்தான். இவன் மகள் உஷை. கனவில் இவள் ஒரு நாள் அநிருத்தனைக் கண்டாள். விழித்த பின் செய்தியை உயிர்த் தோழியிடம் உரைத்தாள். அவளுடைய மனநிலையை உணர்ந்த தோழி, தன் யோக வித்தையால், பிரத்யும்நன் புதல்வனை, கண்ணன் பேரனை அந்த அநிருத்தனை, துவாரகையில் தூங்கியிருந்தவனைக் கட்டிலொடு தூக்கி வந்தாள். உஷையின் அந்தப் புரத்தில் விட்டாள். கண் விழித்த பின், அவனும் அவளும் இன்பம் எய்தி யிருந்தனர்.

பாதுகாவலரால் இதை யறிந்த பாணன், மாயையால் அநிருத்தனை மடக்கி, அவனை எடுத்துச் சிறையில் இட்டான்.

நாதாக்கள் ஏத்தும் நஞ்சுண்டவன் சேயே
நீதா கருணை ஐயா நினக்கே அடைக்கலமே.

செய்தியுணர்ந்து, கருடாழ்வான் மேல் எம்பெருமான் கம்பீரமாகப் புறப்பட்டான். சோணிதபுர நகர எல்லையில், ஆயிரமாயிரம் காளி கூளிகள் காவல். உருத்திர கண உறு மல்கள்; அக்கினி ஜ்வர தேவதைகளின் அதிர்ச்சி; அடே அப்பா ! எத்தனை பயங்கர எதிர்ப்பு. அவர்களை எல்லாம் அடக்கிய ஆதி மாதவன், படபடத்து வந்த பாணாசுரனைப் பார்த்தான்.

அம்மம்ம அம்ம! பாணன் போரில் விளைந்த பயங்கர மாயம் எவ்வளவு ? அதோ ஒரு பாணன்; இதோ ஒரு பாணன். பல ஆயிரமான பாணாசுரர்கள்; கனல் மழை ஒரு நேரம்; மணல் மழை ஒரு நேரம்; இரத்த மழை ஒரு நேரம்; என்ன கோர யுத்தம்! நினைத்தாலும் குலை நடுங்குகிறதே !

பல்லாயிரம் சூரியர்போல் என்றும் ஒளி பரப்பும் திருவாழி ஆழ்வானை, எம்பெருமான் ஏவினன். ஆக்கிரமித்து எழுந்த அவன், பாணன் ஆயிரம் தோள்களுள் பலவற்றை, அருவிபோல் குருதி பாய அறுத்தான். அஞ்சினன் பாணன். அழுது கதறினன்.

அபயம் பிரபோ ! அபயம் அபயம் ! உயிர்ப்பிச்சை உதவுக என்று வீழ்ந்து வணங்கி வேண்டினன். பலகாலம் மக்களை வருத்திய அவனுக்கும் இரக்கம் காட்டிய எம்மான், ஒரு நான்கு தோளும் உயிரும் உதவினன். அதன்பின் விடுதலை பெற்ற அநிருத்தனுக்கும் உஷைக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

பாணன் மாயம் பலவற்றை அடக்கிய திருவாழி ஆழ்வான்றன் ஆற்றலே ஆற்றல். அவனை வலக்கரத்தில் அடக்கியாளும் பெருமான்றன் பெருமையே பெருமை. இது குறித்து மாதவனுக்கு அன்றே மங்களா சாஸனம் செய்திருக்க வேண்டும். அந்நாளில் இருந்தோர் அது செய்யத் தவறினர்.

ஆதாரம் இல்லையா அடியேனுக்கு இவ்வுலகில்
நீ தான் சரணம் நினக்கே அடைக்கலமே.

ஏன், நாமும்தான் இத்தனை நாள் இதனை எண்ணுதிருந்தது எவ்வளவு பெரிய தவறு! அந்தக் குறை அகல, இனியாயினும், எம்பிரானுக்குப் பயனுன மங்களா சாஸனம் பாடலாம் வாருங்கள் என்கிறுர், பேராளன் பேரோதும் பெரியாழ்வார்.

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி
திகழ்திருச் சக்கரத்தின்
கோயில் பொறியாலே ஒற்றுண்டு
நின்று குடிகுடியாட் செய்கின்றேம்
மாயப் பொருபடை வாணனை
ஆயிரம் தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே!

(பொ-ரை.) (மதி பரிதி தீ முதலிய) ஒளியுடைய பொருள்கள் ஒவ்வொன்றினும் மிக்குச் செவ்வொளி சிறக்கும் திருவாழியாழ்வான் திகழ்ந்திருக்கும் இடமான சிறந்த சக்கர அடையாளம் தோன்ற, (தோளில்) ஒற்றப்பட்டவர்களாய் வழி வழி (பெருமானுக்கு) ஆளாகி வாழ்கின்றவர்கள் நாம்; மாயப் போர் வல்ல படைகளையுடைய பாணுசுரனின் ஆயிரம் தோள்களிலிருந்து பொழியும் குருதி, (வெள்ளம் போல்) பாய, (கரகரவென்று) சுழன்ற சக்கரத்தை ஆள வல்ல அம்மானுக்கு மங்களா சாஸனம் செய்வம், (எ-று).

வானவரும் முனிவரும் வருத்தம் தவிர்ந்து வாழ, என்றே நடந்த இந்த ஆடலை எண்ணுகின்ற ஆழ்வாரும், அவரைச் சார்ந்தவருமே வாழ்வதற்கு வழி உணர்ந்தோர். கனிந்த மனத்தொடு நாமும் அவர்களொடு கலந்து, பரமற்குப் பயனுன பல்லாண்டு பாடுவம். அதன் மூலம், வாழ்வின் இடைவரும் மாயா மயக்கமெல்லாம் தீர்வம். ஆம். அது தான் வாழ்வதற்கு வழி.

ஆறுமுகா என்ன அறும்துன்பம் என்கின்றுர்
பேறளித்துக் காநீ பெருமாவுன் அடைக்கலமே.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.)

காஞ்சி :

திருமேற்றளி வரலாறு :—ஒரு சமயம் திருமாலுக்குச் சிவசாரூபம் பெற வேண்டுமென்ற அவா எழுந்தது. வேண்டியாங் கெய்தற்கு வேண்டப்படுவது தவம். ஆதலின், திருமாலும் பன்னாள் வருந்தி அருந்தவ முயன்றார். தவத்திற்கு இரங்கும் தயவாளராகிய சிவனார் விடையேறும் விமலராய் அவருக்குத் திருவுருக்காட்சி நல்கினர். பின் திருமாலைநோக்கி அன்ப! உன் உள்ளக் கருத்து வைவச்சுத மனுவந்தரத்தில் இருபத்தெட்டாம் கலியுகத்தில் நிறைவேறும், அது போழ்து சீகாழிப்பதியில் தோன்றும் நம் அன்பன் திருஞான சம்பந்தனால் உனக்குச் சிவசாரூப நிலை கிட்டும். அற்றைநாள் காறும் நீ இங்கேயே தங்கித் தவமியற்றுக" என்றருளி மறைந்தனர். அரனார் ஆணையைச் சிரமேற் கொண்ட திருமாலும் அங்ஙனமே தவஞ் செய்துற்றார். குறித்த காலமும் குறுகியது. முத்தமிழ் விரகரான தவஞானச் செல்வர் திருமேற்றளிக்கு எழுந்தருளி, திருமால் கருத்தறிந்து, அவர் சிவசாரூபம் பெறுமாறு திருப்பதிகம் அருளினர். திருமகள் கேள்வரும் பரஞ்சுடர்த் திருவுருப் பெற்றார்.

"... ... ... கருநோய்
ஒருவி வீடுறும் **மேற்றளி** என்பதொன்றுளதால்."

"நவிலும் அத்தலத் தெய்தி முன் நாகணைப்புத்தேள்
கவிரிதழ்ச்சிறு நுணுகிடைக் **கவுரிதன்** களபக்
குவி முலைத்தடச் சுவடுதோய் குரிசில் **சாரூபம்**
புவிமிசைப் பெறவிழைந்து மெய்த்தவம் புரிந்தனனால்.

ஆற்றிருந்தவ மியற்றுழி அழல்விழித் தறுகண்
கூற்றை வென்றருள் பரம்பொருள் கருணைகூர்ந்தடலான்
ஏற்றின் மீதெழுந் தருளிஎம் அடியரிற் சிறந்தோய்!
நோற்று நொந்தனை வேட்டன நுவறி என்றருள."

நெஞ்சார உன்னை நித்தம் நினைப்பார்கள்
அஞ்சாரென் றுன்தாளில் ஆனேன் அடைக்கலமே.

"எந்தை! நீதா முழுவதும் பெற்றுளேன் இந்நாள்
அந்தில் என்தனக் களித்தருள் ஐய நின் உருவம்"

"என்றவாய் மொழி திருச்செவி ஏறலும் எங்கோன்
ஒன்று கூறுவ துற்றனன் உவணமீ துயர்த்தோய்!
நன்றுநேர் வைவச் சுதமனு வந்தரம் நணுகும்
அன்று நாலிரண்டு ஈற்றுடை இருபதாம் கலியில்.
காழி மாநகர்க் கவுணியர் குலத்தொருகாளை
ஏழிசைத் தமிழ் ஞானசம் பந்தனெம் அடியான்
யாழுநீ பெற எம்முரு இங்குவந் தளிப்பான்
ஆழியோ யதுகாறும்இவ் வரைப்பினி லமர்ந்து
ஈட்டருந்தவ மியற்றுகென் றருளி நீங்குதலும்
கோட்ட மின்றிமா லம்முறை கொய்தபூங் கொன்றைத்
தோட்ட லங்கலால் தொழப்புகும் முத்தமிழ் விரகர்
பாட்டலங்கலால் பரஞ்சுடர் திருவுருப் பெற்றுன்"

"முருகப் புத்தேள் அருள்விழிப் பார்வைதன்னல் முகுந்த
னேர் இலிங்கமானன்"]

—காஞ்சிப்புராணம்.

இந்த வரலாறு நம் அருணைமுநிவரைப் பிணித்தது. ஒன்று திருமாலே சிவசாரூபம் பெறுவது. அதனைவிடச் சிவசாரூபம் பெறச் செய்தவர் அபர சுப்ரமண்யத்தின் அமிச மெனப்படும் அருள் ஞானக்கன்றுகிய திருஞான சம்பந்தர் என்பதே. ஆகையால் இவ்வரலாற்றைத் தமது சிவமார்கச்சித் திருப்புகழில் கூறும்போது திருமாலுடைய சிறப்பெல்லாம்வர ஒரு திருப்புகழில் சரியான நாலடிகளில் பாடும் அழகைச் சிந்தியுங்கள். நம் கந்தவேளுக்குத் திருமால் சொந்த மாமன் என்ற உரிமைபற்றி அங்ஙனம் ஓதினர் போலும்.

"குறியவன் செப்பப்பட்ட எவர்க்கும்
பெரியவன் கற்பிக்கப்படு சுக்ரன்
குலே குலைந்துட்கச் சத்யமிழற்றும்—சிறுபாலன்

சித்தர்கள் போற்றும் சிவகிரித் தேவேநின்
சித்த மிரங்கியருள் செய்நின் அடைக்கலமே.

குதலையின் சொற்குத் தர்க்க முறைக்கும்
கனகன் அங்கத்தில் குத்தி நிணச்செங்
குடர்பிடுங் கித்திக் குற்றமுகச்சிங்—கமுராரி

பொறிவிடுந் துத்திக் கட்செவி யிற்கண்
துயில் கொளும் சக்ரக் கைக்கிரிச் சுத்தம்
புயலெனும் பொற்புப் பெற்ற நிறத்தன்—ஜகதாதை

புனிதசங்த்துக் கைத்தல நிர்த்தன்
பழைய சந்தத்தைப் பெற்ற மடப்பெண்
புகலுகொண்டற்குச் சித்தியளிக்கும்—பெருமாளே

(வாமனரும், திரிவிக்ரமரும், ஆசிரியனான சுக்ரனவனும் நடுங்க உண்மையைச் சாதித்த பிரகலாத குழவியின் மழலைமொழியை எதிர்த்த கனகன் (இரணியன்) குடரைப் பிடுங்கித் திகந்த முட்டிய நரசிங்க முராரியும், பாம்பணை துயிலும் மலையும், கையிலாழி எடுத்தருள் கார் வண்ணனும், உலகநாதையும், சங்கேந்து கையானும், அரனுர்க்குப் பழைய தேவியான அரியுமாய்ப் புகழப்படுதலைக் கொண்ட திருமாலுக்குச் சிவசாரூப மளித்த பெருமாளே.)

சிவசாரூபசித்தி பேசத் தொடங்கியவர், அதற்கு முன்னும் பின்னுமான சோபான நெறியைப் பேசுமுறையைக் கூர்ந்து கவனியுங்கள்.

பதமுத்தி நான்குவகை. அவை சாலோகம் (இறைவனுடன் அவனுலகத்துறைதல்.) சாமீபம் (இறைவனது அணுக்கனுயுறைதல்.) சாரூபம் (இறைவன் போன்ற திருவுருப்பெறுதல்.) சாயுச்சியம் (இறைவனடியி லிரண்டற ஒன்றுதல்) எனப்படும். இவற்றை அடையவேண்டுநர், சரியைத் தொண்டினுல் சாலோகமும், கிரியையால் சாமீபமும், யோகத்தால் சாரூபமும், ஞானத்தால் சாயுச்சியம் பெறுதலும்கூடும். எனவே திருமால் விரும்பியது சாரூபநிலை என்னும் மூன்றும் நிலை. இது யோகத்தால் கிட்டுவது. இதனைப் பெறுவோர், விரும்பும் சரியை, கிரியைகளை முடித்

வன்னமயில் ஏறும் வள்ளி மணவாளா
இன்றுமெனை யாண்டிலையே எந்தாய் அடைக்கலமே.

தல்வேண்டும். அத்தொண்டுகள் போன்ற செய்திகளைக் கொண்ட திருமால் லீலைகளைக் குறிப்பது காண்க. வாமனராயும், நெடியராயும். நரசிங்கராயும் இருந்த நிலையில் சிவனுரை வழிபட்ட செய்தி உபதேசகாண்டம் கூறும். இவை திருமால் சரியையும், கிரியையும் முடித்த குறிப்பு தருகின்றன. பாம்பணை துயிலுதலை 'யோகநித்திரை' 'அறிதுயில்' எனக்கூறும் வழக்கமுண்டு. அதனுல் யோகநிலை பேசப்பட்டது. சக்கரம்—சுழலும் மனத்தையும், சங்கு—உலக ஆரவாரத்தையும் காட்டின. இவற்றைத் தாங்குதலாவது சகித்துக் கடந்தவர் என்பதும், நிர்த்தன்—என்ற காளிங்கன் தலைமேலாடியது குண்டலினி 'யோகத்தைக் குறித்தது ஆதலால், யோகம் முடித்தார் என்க. சித்தியளித்தல் என்பது அதனுல் சிவசாரூப நிலை வந்தபயனும் கூறினுர். பின்னுல் அவர் அடையத்தக்க இறைவனோடு ஒன்றும் சாயுச்ய நிலையும் குறிக்க பழைய சந்தத்தைப்பெற்ற 'மடப்பெண்' என்ருர். இறைவனோடு அரியலால் தேவியில்லை என்று இணைந்து நின்ற பழைய வடிவைக் குறிப்பிடுகிருர் என்க. எனவே நான்கு வழியான வழிபாடு இயற்ற நான்கு கதிகள் பெறலாம் எனவும் தெரிவித்தாராயிற்று.

இவையன்றி காஞ்சித் திருப்புகழில் "தமிழ்சேர் காஞ்சி" என்பதற்கேற்ப, புலவர்க்குக் களிப்பூட்டும் மிடுக்குச் சந்த வகைகளும், துறை வகைகளும், சிலேடை முதலியனவும் பொருந்தப் பல காணலாம்.

காஞ்சியின் சிறப்பைக் கூறும்போது பெண்ணுசையை வெறுத்த பெருந்துறவியர் வாழுமிடம் என்பதைச் சிலேடையாக

"கச்சிவர் குரும்பைக் கச்சவர் விரும்பு
கச்சியிலமர்ந்த—பெருமாளே"

கச்சையணிந்த தனத்தாசையைக் கைப்பாக எண்ணுமவர் விரும்பும் காஞ்சியமர்ந்த பெருமாளே" எனக்கூறுகிருர். காஞ்சித்தலத்தில் குமரகோட்டம், காமகோட்டம், கச்சிக்கச்சாலை (கச்சபேசர் கோவில்—கமடாலயம்)முதலிய

தூங்காமல் தூங்கும் தூயசிவ யோகத்தை
நீங்காமல் சேர்த்துவைக்கும் நினக்கே அடைக்கலமே.

கோட்டங்க ளனைத்தையும் பாடியுள்ளமை குறிக்கத் தக்கது.

காஞ்சித் தலத்தமர்ந்த கந்தவேளாகிய அரசன் கிளி வளர்ப்பதில் அதிக சமர்த்தன்போலும். கிளி வளர்ப்போர் அதற்கு 'அக்கக்கா' 'ரங்க ரங்கா' 'யார் அவன்'

என்றெல்லாம்கற்பிப்பதுவழக்கமல்லவா! கந்தவேளுக்கு தினைப்புனந்தனில் ஒரு கிளி கிடைத்தது. அதற்குக் காதல் (களவு) மொழி கற்பித்தான். மற்றொன்று சொர்க்கம் என்னும் பொன்னாட்டினின்றும் கிடைத்தது. அது கற்பு மொழி பேசக் கேட்டின்பமுற்றான். இங்கே புனத்தத்தை—வள்ளியையும், சுத்தபத்திச் சித்ரச்சொர்க்கச்சொர்க்கத்தத்தை (தூயபேரன்பும் அழகுமுடைய தனமுடைத் தேவலோகக் கிளி—) தெய்வ யானையையும் உணர்த்தியது இக்கருத்து.

"புனஇளந் தத்தைக்கு இச்சை உரைக்கும்
புரவலன் பக்தர்க்குத் துணைநிற்கும் புதியவன்"

(தினைப்புனத்து இளங்கிளிக்கு (வள்ளி) காதல் உரை கற்பிக்கும் அரசன், அடியார்க்குத் துணையாகும் புதியவன்) என்ற திருப்புகழில் காண்கிறோம்.

வள்ளிக்குக் காதல் உரைத்து என்பது வள்ளியை மணந்த களவு நிலையையும், ஒன்றும் கூறுது சொர்க்கத் தத்தைக்கு இனியோன்—என்பது தேவயானையை மணந்த கற்பு நிலையையும் குறித்தனபோலும். அருணகிரிநாதர் கண்களுக்கு இருதேவியரும் ஞான நங்கையராகவே காட்சி தருவர்.

"சுந்தர ஞான மென்குறமாது" (வள்ளி)
"மேலான ஞான முத்திமங்கை" (தெய்வயானை)

என்ற வாக்குகளைப்பார்க்க—இங்கு வள்ளியையும் தேவசேனையையும் 'தத்தை'—தத்திப் பேசும்—கிளிகளென்றமை போலவே தணிகைப் பாசுரத்தில் இருவரையும் 'மான்' என்றனர்.

பெரியோரைப் பேணிப் பேரின்பம் நேர, அருள்
புரிந்தென்னைக் காக்கும் புனிதா நின் அடைக்கலமே.

"தினைவன மானும் கனவன மானும்
செறிவுடன் மேவும் திருமார்பா"

இனி நம் சந்தமுனிவர் இருதேவியருக்கும் முருகனது ஈராறு தோள்களையும் சரிபாதியாகப் பிரித்துத் தருவதை

"தெய்வானைதோள் பூணிஇச்சை ஆறுபுயா
புயாறுள—பெருமாளே"

[தெய்வயானை தோளைத்தழுவும் இச்சைமிக்க ஆறுபுயமும், (வள்ளிக்குரிய) புயமாறும் உடைய பெருமாளே]

என்ற சோலை மலைத்திருப்புகழில் அறிகிறோம். இவ்வாறு வரும் இடங்களில் இலக்கியச் சுவையும் சமய நுட்பமும் பின்னிக் கிடக்கப் பார்க்கலாம்.

இத்தலப் புகழ்ப்பாக்களில் அர்ச்சனைசெய்து வழிபட, திருவடித் தியானம்செய்ய, உலகியல் நிலையினரைப் பாடாது, சமய சங்கத்தைக் கடந்து, பற்றிய பற்றெலாம் அற, பதிப்பொருளை உணர்ந்து போற்ற, அடியர் கூட்டம் விழைந்து முத்திபெற பாடும் பாடல்கள் மிகப்பல; அந்த அடிகளை-யேனும் மனனம் செய்யுமாறு கீழேதருகிறோம்.

1 "அற்றைக் கிரைதேடி—அத்தத் திலுமாசை
பற்றித்தவியாத—பற்றைப் பெறுவேனோ

2 "சுத்தச் சித்தத்துப் பத்திப்பத்தர்க்கு ஒத்துச்
சற்றர்ச்சிக்கப்—பெறுவேனோ

3 தம் பராக்குஅற நின்னையுணர்ந்துரு
கிப்பொற்பதமக்—கழல் சேர்ந்தார்
தம் குழாத்தினில் என்னையு மன்பொடு
வைக்கச் சற்றுக்—கருதாதோ

4 ... ... பொருள்தேடி
சிரிது கூட்டிக்கொணர்ந்து தெருவுலாத்தித் திரிந்து
தெரிவை மார்க்குச் சொரிந்து—அவமேயான்
திரியுமார்க்கத்து நிந்தை அதனை மாற்றிப் பரிந்து
தெளிய மோட்சத்தை என்று—அருள்வாயே"

இன்னம் பலவுள. விரிவஞ்சி விடுத்தனம். இத்துடன் "சொர்க்கத்துக் கொப்புற்ற காஞ்சி" என்னும் பிருதிவித் தலம் கச்சிப் பெருமாளருளால் இனிது முடிகிறது.

வேலாயுதா என் வினைதீர்த் தருளாயா
காலாயுதக் கொடிகொள் கந்தா நின் அடைக்கலமே.

சிவநேயச் செல்வர்கள் 8.

யாதவ மன்னன்

(ரசபதி)

நலம்பல நிறைந்தது நாராயணபுரம். வளம்பல வாய்த்த அப்பதியின் மன்னன் யாதவன். அவன் யதுகுல திலகன். பரம சிவபக்தன் அந்தப் பார்த்திபன். வாய்மை தவருத பூபதி என்று மக்கள் அவனை வாழ்த்துகின்றனர்.

அரச மாளிகையில் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு உத்யோகம். எவரும் தம் பணியில் கருத்தூன்றி யிருப்பர். பொன் கலத்தில் உணவுண்பது பூபதியின் வழக்கம். அதைச் சுத்தி செய்து வைப்பவள் ஒருத்தி. புனிதை அவள் பெயர் பொற்கொடி. பெயர்க்கேற்ற அழகி. உள்ளஞ் சிறந்த உத்தமி. மணம்செய்து கொண்டால் மனை யறத்தில் செல்லும் மனம். வேண்டவே வேண்டா அந் நிலை என்று வெறுத்தாள்.

இன்று அவட்குத் தாயில்லை; தந்தையும் காலமானர். தன்னந் தனியாய் இருக்கிருள். வயிற்றுப் பாட்டிற்கு வழிவேண்டும். அதற்காகக் காவலர் அரண்மனையில் கலம் கழுவும் உத்யோகம். ஓய்வு நேரம் அதிகம் உண்டு. சிவ பக்தியிற் சிறந்த அவட்கு, அடியவர்க்குத் தொண்டு செய்ய அளவிறந்த ஆவல். வாய் ஜெபித்த ஐந்தெழுத்தை, அவள் உள்ளமும் உருவேற்றி யிருந்தது.

* * *

பொன்னுய் மிளிரும் புளகித மேனி. திரண்டு உருண்ட தோள்கள். எடுப்பான தோற்றம். நீறணிந்த கோலம். உருத்திராக்க மாலை. சிவலிங்க தாரணம். ஆம். கட்டிளங் காளையான ஒரு அடியார், நாராயணபுர வீதி ஒன்றில் நடந்து வருகின்முர்.

அய்யா முருகாவுன் அடியே கதிஎன்பேன்
துய்யா நீயே துணையுன் அடைக்கலமே.

கண்டவர் யாவரும் கைகுவித்தனர். குன்றம் கொன்ற குமரன் நடை இது. இல்லை யில்லை. படைமழு ஏந்திய பரமன் நடை. நாரணன் பொன்னுடையை நாண வைத்த காவியுடை. அருமைத் தந்தத்தால் அமைத்து, பவளக் குமிழியிட்ட பாதுகை. மகத்தான ஜபமாலை புரளும் மார்பு. தொங்கு சடை. தலையில் சுற்றிச் செவிகளின் ஓரத்தில் தொங்கவிட்ட பூமாலை. வலக்கையில் பிரம்பு.

ஆ! கனவினும் இது காண முடியாத காட்சிதான். இங்ஙனம் பலர், பலவாறு அந்த அடியாரைப் பயபக்தியோடு பாராட்டிப் பேசுகின்றனர். இரும்பைக் காந்தம் ஈர்ப்பது போல, தம்மைக் காண்பவர் தம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, வீதி வழியே, தம் போக்கில் அந்த அடியார் விரைந்து செல்கிறார்.

* * *

மாலை மணி ஆறு. தன் மாளிகையி லிருந்து, பூபதி மாளிகை நோக்கிப் புறப்பட்டாள் பொற்கொடி.

என்ன இது! யார் இவர்? ஆம். சித்தம் கவரும் சிவனடியார். விரைந்தாள். அவர் திருவடியில் வீழ்ந்தாள். எழுந்தாள். புளகித்தது புந்தி.

கன்மக் கட்டறுத்த காட்சியீர்! ஆடும் மாடும் போன்றூர் நடமாடும் நாட்டில், பயனுன தங்களைச் சேவித்து இன்று பாக்யவதி யாயினேன். இரக்கம் காட்டி, எளியாள் குடிசைக்கு எழுந்தருள வேண்டுகிறேன். ஏழையின் பிட்சையை ஏற்று, ஏட்டில் அடங்கா வினையுடைய என்னை யீடேற்றப் பிரார்த்திக்கிறேன். இப்படி விநயம் மிகுந்து வந்தது பொற்கொடியின் விண்ணப்பம்.

அன்புக் கண்ணீர்பெருக்கி வேண்டுவாளை, அருளொடு நோக்கினர் அடியார்.

வையா புரியரசே வாழ்த்தி யுனைவணங்கல்
மெய்யா அறியாயோ மேலோயுன் அடைக்கலமே.

பார்த்தவர் எல்லாம் எம் கோலத்தைப் பாராட்டினர். அவ்வளவுதான் அவர்கள் நிலை. தேனொழுகப் பேசுவார்; எளிய நிலை பிறந்த போது தெருவழியே கைவிடுவார். என்ன உலகமோ இது!

அளவிறந்த பசியுடையேன்; குறிப்பறிந்து அன்பொடு என்னை அழைக்கின்றாய். சிவனடியார் வரிசையுள் சேர்ந்தவள் நீ. உனக்கு ஒப்பானார் இல்லை. சொல்லக் கூசுகிறது உள்ளம். கோபம் கொள்ள மாட்டாயேல் கூறுகிறேன்.

ஸ்வாமி! சேயிடம் தாய்க்கு அச்சமா! தாராளமாய்ச் சொல்லலாமே!

அன்பினளே! வேதிக்கும் பசிதீர, உத்தம உன் கையாலேயே ஊட்டுவாயா? அன்பர்களிடத்தில் அப்படி உண்பதில்தான் எனக்கு ஆநந்தம்.

புன்னகை செய்தாள் பொற்கொடி. அடியரைப் பீடத்தில் அமர வைத்தாள். அவர் விரும்பியபடியே அறு சுவை உணவை அருத்தினள். புனித சந்தனத்தைப் பூசினள். தாம்பூலம் மடித்துத் தந்தாள். படுக்கை விரித்தாள். படுத்த அடியார் பரம யோகபரர் ஆயினர். கால் பிடிக்கும் கைங்கர்யத்தில் கருத்தைச் செலுத்தினள் பொற்கொடி.

அடியவரானல்தான் என்ன? ஊட்டுவதும், ஆடவரை உபசரிப்பதும், கண்ணுறங்கும் நேரத்தில் கால்பிடிப்பதும் சேச்சே! என்ன கேவலம் என்று பலர் பலவாறு பேசினர். கீழ்களுக்கு என்றும் கீழ்ப் புத்திதானே. எதிர்வீடும் பக்கத்து வீடும் இப்படி ஏளன நகையை எழுப்பியது. காற்றுப்போக்கில் பொற்கொடியின் காதிலும் விழுந்தது இரண்டொரு செய்திகள். அடியவர் உருவில் ஆண்டவன் வருவான். இந்தப் பாவனையில் இருந்த அவளுக்கு, புகல்பவர்

பழனிமலை யாயுனைப்போல் பாரில் எவருளரே
பரம தயாநிதிகண் பாராய் அடைக்கலமே.

வசைமொழிகள் பொருளாகவே தோன்றவில்லை. அடியார் பணியில் அழுந்திய அவள் மனம், மன்னர் பணியை மறந்தது; தன்னையே மறந்து தனியின்பத்தில் லயித்தது.

'நாட்டார் நகை செய்ய; நாம் மேலை வீடெய்த
ஆள்தான் கொண்டு ஆண்டவா பாடுதும்காண் அம்மானாய்!'

என்ற திருவாசகம் இங்கு நம் நினைவிற்கு வருகிறது அல்லவா!

* * *

இரவு மணி ஒன்பது. நீராடி அநுட்டித்து, மன்னர் உணவுண்ணும் இடத்திற்கு வந்தார். கிழக்கு நோக்கி அமைதியுடன் சிறிது நேரம் இருந்தார். வாய்த்த உண்கலம் வரவில்லை. கழுவி வைப்பவளையும் கண்டிலர். எதிரிலிருந்தாரை நோக்கினர். வாய் பொத்தியிருந்த அவர்கள், அவள் இன்று வரவில்லை என்றனர்.

கைப்பிடியாக அவளை அழைத்து வாருங்கள் என்று கர்ஜித்தார் காவலர். மனோ வேகம்போல் விரைந்தனர் ஏவலாட்கள்.

* * *

பொற்கொடீ! பொற்கொடீ!!

யார் அது? வெளியில் வந்தவள், அப்படி அதட்டி அழைத்தவர் அரச ஏவலர் எனலை யறிந்தாள். அஞ்சியது நெஞ்சம்.

ஆ! மறந்தேன்; இதோ வருகிறேன் என்று விரைந்தவள், அடியவரை அணுகினள்.

ஸ்வாமி! போய்விடாதீர்கள்! கொடியில் திரும்பி விடுகிறேன் என்று வேந்தன் ஏவலருடன் விரைந்தாள். அடியரிடத்து அன்பு பின்னிழுக்க, அரசரிடத்து உண்டான அச்சம் முன்னிழுக்க, ஏதோ ஒருவாறு நடந்தாள்.

அழைப்பதும் வெற்றுரையோ ஆகாதிவ் வாதென்மேல்
அழகல்ல ஈதுனக்கென் ஐயா அடைக்கலமே.

அரசர் சீற்றத்தை எண்ணும்போதே அதிர்கிறது மனம். உடலாட, இடைதுவள, வெயர்வை அரும்ப, கண்ணீர் ஒழுக வந்து காவலனைக் கண்டாள். காலில் வீழ்ந்தாள். மேலாடை சரிய எழுந்தாள்.

பிரபோ! மன்னிக்க வேண்டும். இனி என் வாழ்நாள் முழுதும் இத்தகைய தவறு செய்யவே மாட்டேன் என்று மன்றாடி வேண்டி, மீட்டும் மன்னரை வணங்கினள்.

கடும்பசியுடைய காவலன் கடுத்து நோக்கினன்.

முன்னே இவளை மொட்டை அடியுங்கள்! இவட்குச் சரியான தண்டனை இது! இனியும் தவறு செய்கிறாளா பார்ப்போம் என்று உருத்துரைத்து, அவ்வளவில் ஆறி யடங்கியது அரச கோபம்.

கறுத்து, சுருட்டையிட்டு, நெய்த்து, நீலமணியை, கருவண்டை, நீர்ப்பாசியை, கருமணலை நாண வைத்து மலரணிந்து நீண்ட கூந்தல், நாவிதனால் அக்கணமே நறுக்கப்பட்டது. தோகையிழந்த மயில்போல் பொலிவிழந்து நின்றாள் பொற்கொடி. தெண்ணீர் அருவிபோல் கண்ணீர் சிந்த, செல்லும் வழியெல்லாம் சிலிர்த்தது உடலம். குமுறியழும் அவள் குரலைக் கேட்டு, மனம் போனபடி யெல்லாம் மக்கள் பேசினர்.

காலத்தில் செய்யும் கடமை தவறலாமா? அதனால் வந்த அவதி இது! அது சரி. அதற்கு இவ்வளவு பெரிய தண்டனையா. ஆடையும் ஆபரணமும் பெரிதல்ல. கூந்தல் போனபின் பெண்ணின் அழகு குலையுமே! எவ்வளவு வறுமை யிருந்தாலும், அது தவிர்க்க அடிமைப்பட்டு வாழ்வது ஆகாது. கோடி செல்வம் கூடுகின்றதென்றாலும், குற்றேவல் வாழ்வு கொடியதுதான்.

கூடிப் பேசும் குடிகள் மொழிகள், மேலும் துயரைத் தூண்ட, புனித தன் மாளிகையுள் புகுந்தாள். தன்னை

சிறியேன் நான் செய்தபிழை தீரப் பொறுத்தருள் நீ
மறிவறியா ஞானம் வழங்குன் அடைக்கலமே.

எதிர் நோக்கியிருந்த அடியாரைக் கண்டதும், வீழ்ந்து வணங்கினள். விக்கினள் ஆரம்பத்தில்; பொருமினள் அதன்பின்.

என்ன நடந்தது பொற்கொடீ? என்றார் எம்மான் அடியவர். அவரைத் தவிர ஆதரவு அறியாத அவள், நடப்பை உரைத்து, மார்பெல்லாம் நனைய ஆவென்று வாய் திறந்து அழலாயினள். அன்பின் உணர்வினளான அவள் கதறல், புண்ணிய விண்ணவர் செவியிலும் புகுந்தது.

உத்தம பக்தர்கள் உள்ளம் மகிழ்ந்தால் உம்பர்கள் இதயம் களிப்படையும். மாறுகி அன்பர்கள் வருந்துவரேல், வானவரை அத்துன்பம் வருத்தும்.

'தண்டறு சிந்தை தபோதனர் தாம் மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டது'

அருள்மூலம் அறிந்த திருமூலரும், அதிரகஸ்ய நுட்பமான இதனை அருளொடு நமக்கு அறிவித்திருக்கிறார் அல்லவா? இந்தப் பரம ரகஸ்யத்தை அறிந்தவர் இன்றும் சிலர் இருக்கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்திதான்.

மலர்களை உதிர்த்திட்ட கொடிபோல் புரளும் பொற்கொடியை, அருளொடு நோக்கினர் அடியார்.

கலன் கழுவி வைக்கவில்லை. இது ஒரு பெரிய குற்றம்; அதற்கு மொட்டையடிப்பது முதல் தண்டம். இன்று மயிர் போக்கினன்; நாளை உயிர் போக்குவான்; மலைபோல் பெருகிய தம் குற்றங்களை மறந்து கிடக்கின்ற மக்கள் செயல் இது; சேச்சே! உலக நிலையே கேவலம்!

சுவாமி! மயிர்நீப்பின் உயிர்வாழாத கவரிமான்; அதனினும் கேடு கெட்டவளாயினேன்.

நாணம் சிறந்த நங்காய்! ஆறியிரு என்று அவள் தலையைத் தொட்டு ஆசி கூறினர் அடியார்.

மாயா உலகில் மயங்கி விழுந்தவெனை
வாயால் அழைத்துமனு வழங்குன் அடைக்கலமே.

ஹா! என்ன வியப்பு! அறுந்த இடத்தில் கூந்தல் வளர்ந்தது. அறுபட்ட சுவடே தெரியவில்லையே! முன்னையதினும் அற்புதமாக இருக்கிறது, கடை சுருண்ட மயிர்த்திரள்.

கனற்றும் பாலைவனத்தில், கார்முகில் கண்ட மயில் போல் களித்தது மனம். பலநாள் பட்டினியாளன் முன் தேவாமிர்தம் எதிர்ப்பட்டதுபோல், இன்பச் சிலிர்ப்பெய்தியது மேனி. வீழ்ந்து வணங்கினள். வாழ்ந்தேன் ஸ்வாமி என்று வாழ்த்தியது வாய். உவகையின் அடையாளமாக, முத்துக்கள், அவள் கண்களிலிருந்து உதிர்ந்தன. அன்றைய இரவு, இப்படி இன்ப இரவாக இருந்தது.

* * *

மறுநாள் காலை மணி ஏழு. அரசர் சிற்றுண்டி கொள்ளும் நேரம். கழுவிய பொற்கலத்தைப் பொற்கொடி, காவலர் முன் வைத்தாள். காவலன் அவள் தலைமயிரைக் கண்டான்.

என்ன இது? என் தண்டம் இரவே நிறைவேறவில்லையா? அரசர் வாயிலிருந்து அதிர்ந்து வந்தது வார்த்தை.

மன்னர் பெருமா! உலகில் தங்கள் ஆக்ஞையை மீறுவாரும் உளரோ! முன்செய் புண்ணியத்தால், அடியாள் மனையில் ஒரு அடியார் வந்துளர். அவருடைய அருளை அறிவிக்கின்றது, வளர்ந்து நீண்ட இந்த வார்குழல் என்று, நடந்தவைகளை அறிவித்தாள் அந்நங்கை.

ஆத்திரம் அகன்றது; அமைதி பிறந்தது. முன்னிருந்த சிவ பக்தியும், சிவனடியார் மேல் இருந்த அன்பும் மன்னரிடத்தில் சிலிர்த்தது.

* * *

அறநெறியை யானுணரேன் அபசாரம் பல செய்தேன்
அறுமுகநான் சிறியனென அகங்கொள்வாய் அடைக்கலமே.

பலருடன் தொடர்ந்த பார்த்திபர், பொற்கொடி மாளிகையுள் புகுந்தார். கனிதரும் அடியவர் கற்பகத்தைக் கண்களிப்பக் கண்டார். அந்த அருள் மேகத்தை அணுகினர். மல இருள் நீக்கும் மாணிக்கத் தீபமே என்று கூவி அவர் மலரடியில் வீழ்ந்தார்; எழுந்தார்; சிரமேல் கரங்குவித்தார்.

பொற்கொடியின் புனித தவம், அருமைத் தங்களை இங்கு அழைத்ததோ என்று, வாயில் தழுதழுத்து வார்த்தைகள் வந்தன.

ஸ்வாமி! தங்கள் திவ்ய தேசம் யாது? இனிச் செல்ல விரும்பிய பதி எதுவோ? அடியேன் இவைகளை அறியலாமா?

உலகம் முழுவதும் உலவினேம். எம்பெருமான் பதியனைத்தும் இருந்தோம். இருக்கும் தலங்களுள், தென் கயிலாயம் சிறந்ததென்று அறவோர் கூற அறிந்தோம். அப்பதியை அடைந்தோம். அகிலமும் அளிக்கும் இறைவற்கு அங்கு இன்பத் திருக்கோயில் இல்லை. உள்ளம் அதனல் உடைந்தோம். பெட்டைத் தலையை மொட்டையடிப்பவர்க்கு வானளாவி மாளிகை வளர்ந்திருக்கிறது. உலகம் உடையானுக்கு, இலகும் கோயில் எடுப்பவர் இல்லையா என்று உன்பால் உரைக்கவே இங்கு வந்தோம்.

மன்னர் மனத்தில் சுருக்கென்று தைத்தது இவ் வார்த்தை. தீமையாளனைத் திருவுளங்கொண்ட தங்கள் கட்டளைப்படியே செய்யக் காத்திருக்கிறேன். ஸ்வாமி! எங்குளது தென் கயிலாயம்? அதன் மகிமையை அடியேன் அறியலாமா?

* * *

இதே தொண்டை நாட்டில் உன் நகரைச் சார்ந்துள்ளது அப்பதி. அண்மையில் இருக்கும் பொழுது அருமை தெரிவதில்லை. இறந்த பின் பெரியோர் பெருமையைப்

வேத முறையறியேன் வித்தையிலேன் பத்தியிலேன்
மாதவர்கள் நட்பளித்து மலநீக்குன் அடைக்கலமே.

பல்லவி பாடுவது பாழும் இந்நாள் பரிபவம். அதுபோல், அடுத்துள அத்தலமகிமையை நீ அறிந்திலை, கேள்!

தலமகிமை

வாழ்விக்கும் தவஞ்செய்தான் வசிட்டன். படமெடுத் தாடியது ஐந்தலைப் பாம்பு. அதன் நிழலில், பரசிவ லிங்க மாய் அருமைத் தரிசனம் வழங்கினன் அமலன். இங் கேயே என்றும் எனக்குச் சேவை தந்து இரும் என்றான் வசிட்டன். அங்ஙனமே ஆயினன் அமலன். அது கண்ட அம்பிகை, ஞானப் பூங்கோதையாய் அப்பதியில் அமர்ந் தாள். இனியும் பிரியேன் எம்பெருமானை என்று, வட கயிலை தன் ஜீவ சொருபத்தோடு சந்நிதியின் கீழ்த் திசை யில் வந்து தங்கியது. அதுதான் தென் கயிலாயம்.

நதிப் பெருமை

அருளொடு காவிரி தந்த அகத்தியன் வேண்ட, ஆகாய கங்கை, மூண்டு பொன்னிறமாகி முழங்கியது. அத் தலத்தின் ஆரம்போல் ஆகி, பொன் முகரி என்னும் புனி தப் பெயரைப் பூண்டது. திருவேங்கடம், பாரமேச்சுரம் என்னும் பதியிற் படர்ந்தது; ஓங்கார தலத்தில் உறவாடிக் கடலிற் கலக்கும் அதனில் நீராடினோர் எவரும் ஜன்ம சாபல்யம் எய்துவர்.

புத்திரப் பேறு

மாசி மகத்தில் வழிபாட்டைத் துவக்கி, அடுத்த மாசிமகம் வரை இங்கிருந்து விரதபூர்த்தி செய்தவர்க்கு சத் புத்திரப்பேறு சித்திக்கும். பிரமன் இப்படி வழிபட்டுப் பெற்ற புதல்வன்தான் உலகம் போற்றும் ரிபு.

சாபத் தீர்வு

'நான்முகன் தொழிலை நான் செய்யமாட்டேன்' என்று, மாபெருங் கர்வம் கொண்டான் மாதவவூறன். ஒருவர் தொழி

சாதனை ஒன்றறியேன் சாந்தி வழியறியேன்
நீதான் அருள்நீதி நிமலா உன்அடைக்கலமே.

வில் மற்றொருவர் இறங்கில் விபரீதந்தான் அதனால் விளையும். தொழிலடியாக சமூகங்களை இயற்கை தோற்றுவித்துளது. சொல்லால் அதை மறுப்பது சுலபம். இயற்கைச் சூழ்நிலையை உணராமல் செயலில் இறங்கிய மாதவனூற! நீ சிறிய நூலை உண்டு பண்ணும் சிலந்தியாகுக என்று பிரமன் சாபம் இட்டான்.

பரம காளன் எனும் பரம்பரசன், அமலன் திருமேனி யின் அணிகலனாகி யிருந்தவன். அரிய சந்நிதியின் அருமை அறியாமல், ஒருநாள், புறஞ்சென்று காமத்தில் புழுத்தான். வெடித்த பாவ அதிர்ச்சியால் பூமியில் வீழ்ந்தான்.

அத்தி என்பவன் சிவகணத் தலைவருள் ஒருவன். அமயம் பாராமல் சிவசந்நிதிக்குள் நுழைந்தான். தகுதி யன்று இது என்று காவலர் தடுத்தனர். அவர்களை அடித்து உருட்டி ஆரவாரித்துப் புகுந்தான். கண்ட அம்பிகை கடுஞ்சினம்கொண்டாள். காட்டானையாக என்று கடுஞ்சாபம் இட்டாள்.

சிலந்தியும் காளனும் அத்தியும், தென் கயிலாயத்தில் ஞானப்பூங்கோதை மணாளனை வழிபட்டு சாபத்தீர்வு பெற் றனர். அம்மூவரும் வழிபட்ட நினைவிற்கு அடையாள மாக, அப்பதி சீகாளத்தி என்ற பெயரும் பெறும். நிலவுல கில் வாழ்பவர்க்கு,சராசரத்தால் நாள்தோறும் அபுத்திபூர்வ மாக நேரும் சாபமோ பலப்பல. அந்தச் சாபத் தீர்விற்குரிய தலம் சீகாளத்தி என்பதை மறந்தபின், உலகிற்கு உய்ய வழி உளதோ?

கண்ணப்பன்

பாசுபதம் கருதித் தவஞ் செய்த பார்த்தன், அருள வந்த அமலனை அறியாமல், ஏடா வேடா என்று ஏளனம் செய்த பாவத்தால், அடுத்த பிறப்பில்,வேட்டுவ குலத்தில், கண்ணப்பராகிக் கண்ணப்பி வழிபட்ட அற்புத வரலாற்றை அறியாதார் எதுவும் அறியாதார்.

பாரில் அரிவையரைப் பார்வதி தேவியென
ஆரிய! சிந்திக்க அருளுன் அடைக்கலமே.

தமிழ்ச் சங்கத் தலைவனான நக்கீரன் முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்ற அப்பதியே இகபர முத்தி தரும் தெரிகிறதா? அத்தலப் பெருமாற்கு அரியதொரு கோயில் கட்டுவது உன் கடன்.

பரவசத்துடன் சிரவணித்து, இன்பக் கண்ணீரை இறைத்தார் யாதவ மன்னர்.

என்ன வியப்பு! பேரொளி எங்கும் பிறங்கியது. அதன் நடுவில் கலகல நகை செய்கிறார் அடியார். அரோஹரா என்று வீரிட்டுப் பொற்கொடி அவ்வொளியுள் புகுந்தனள். கதித்த ஒளிக்காட்சி கரந்தது.

விம்மிதம் எய்தினர் வேந்தர். அறிவிலாதேனை ஆட் கொள்ள, மஹாதேவா! அடியராகி, அற்புதம் காட்டி, தலப் பிரபாவம் கூறி, கோயில் கட்டக் கட்டளையிட்ட கருணையே கருணை என்று ஆனந்தக் கண்ணீர் பாய்ச்சி, ஒளி எழுந்த திசை நோக்கி வீழ்ந்து வணங்கினர்.

* * *

சிகாளத்தியில் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், மதில், கோபுரம், துவஜ ஸ்தம்பம், பலி பீடம் முதலியன மன்னர் பணியால் அமைந்தன. பஞ்ச மூர்த்திகட்கும் தேர், வாகனம், ஆபரணாதிகள் சமைந்தன. நித்ய விழா நைமித்திக விழா நிகழ்ந்தன. இங்ஙனம் அற்புதப் பணி பலவும் செய்து இறைவன் அருள் நிழல் இன்பந் கண்டார் யாதவ மன்னர். கோயிலைச் சுற்றி அமைத்த நகரில் குடியேறிய குடிகள், பரமனை வழிபடுவதன் பயனை இன்றும் கண்டு இன்புறு கின்றனர்.

வாழ்க அடியவர்!

யாரென்னை வைதாலும் வாழ்த்தென் றதையுணரும் வீரங்கொள் உள்ளந்தா விமலநினக்கு அடைக்கலமே.

திருக்குறிப்புத்தொண்ட நாயனர்

(கி. வா. ஜ.)

திருத்தொண்டை நன்னாட்டில் தெய்வ மணம் கமழ்வது கச்சியம்பதி. அப்பதியில் ஏகாலியர் குலத்தில் ஓர் அடியார் தோன்றினர். எந்தச் சாதியினராயினும் எந்தத் தொழிலினராயினும் இறைவனுடைய அன்பில் ஊறினல் அவர்கள் மனிதரில் தேவராகி விடுகிருர்கள். இறைவனுடைய அருளேயே எண்ணி அவ்வெண்ணம் மாருமல் தொழில்செய்து வாழ்ந்தவர் அவ்வன்பர். அவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை.

சிவபிரானுடைய அடியார்களிடத்தில் ஆராத அன்புடையவராகி அவர்களுடைய குறிப்பை அறிந்து தொண்டு புரியும் இயல்புடையவராக இருந்தமையால் அவரை யாவரும் திருக்குறிப்புத் தொண்டர் என்று வழங்கலாயினர். நாளடைவில் அவருடைய இயற்பெயரை யாவரும் மறந்துவிட, திருக்குறிப்புத்தொண்டர் என்ற பெயரே நிலைத்துவிட்டது. அடியாருடைய துணிகளை அன்போடு வெளுத்து அளிக்கும் தொண்டில் அவர் இன்பம் கண்டார்.

இறைவனுடைய திருவருள் நினைவினுல் மனமாசு தீர்ந்து வாழ்ந்த அப்பெரியார் பிறருடைய ஆடையிலுள்ள மாசைப் போக்கும் தொழிலுடையவராக இருந்தார். 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்றபடி அவர் அந்தத் தொழிலில் சிறந்து நிற்கும்போதே சிவ பக்தியிலும் சிறந்து நின்ருர். தொண்டு புரிபவர்க்குப் பொருள் வேண்டும், பதவி வேண்டும், ஆள் வேண்டும் என்று சொல்வது தவறு. உண்மையான தொண்டுள்ளம் படைத்தவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலைக்குத் தக்கபடி தொண்டுகளைச்

எந்நேரமும் உனேயே இதயந் தனிலெண்ண [கலமே
இன்னருள்செய்து உன்னருள்கூர் எந்தாய் அடைக்

செய்வார்கள். பொருள் இல்லாவிட்டால் உடலுழைப்பை வழங்கித் தொண்டு புரிவார்.

பொருளை வழங்குவதைவிட உடலுழைப்பை வழங்குவது உயர்ந்தது. திருக்குறிப்புத்தொண்டர் சிவனடியவர்களிடம் தமக்குள்ள பக்தியை அவர்களுடைய ஆடைகளை வெளுப்பதனால் காட்டினர். அவர் தொழிலிலும் தொண்டு செய்ய இடம் இருந்தது. உண்மையில் அவர் மனசில் இடம் இருந்ததனால்தான், தொழிலிலும் இடம் உண்டாயிற்று.

தம்முடைய கடைப்பிடியி னின்றும் நழுவாமல் தொண்டு புரிந்து வந்த திருக்குறிப்புத்தொண்டரை உலகத்துக்கு அறிவிக்க இறைவன் விரும்பினன். பிள்ளை பள்ளியில் பயின்று புகழ் பெற வேண்டும். அவன் சோதனையில் தேர்ச்சி பெற வேண்டும் அல்லவா ? அதுபோல எல்லா உயிருக்கும் தந்தையாகிய இறைவன் தம் பிள்ளையாகிய திருக்குறிப்புத் தொண்டருடைய பெருமையை ஒரு சோதனையின் மூலமாக வெளிப்படுத்த வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டான்.

மாரிக்காலம் அது. திடீர் திடீரென்று மழை பெய்து கொண்டிருந்தது. பூமி ஈரம் பெற்றது. குளிர் நடுங்கியது. அப்போது ஒரு சிவனடியார் திருக்குறிப்புத்தொண்டரை நோக்கி வந்தார். உடம்பு மிக மெலிந்திருந்தது. இடையிலே கந்தையை உடுத்திருந்தார். அதுவும் பல காலமாக அழுக்கேறி, நனைத்தாலும் எளிதில் நனையாதபடி இருந்தது.

திருநீறு பூசிய அழகுக் கோலத்துடன் வந்த அடியாரைக் கண்டவுடன் மனமகிழ்ந்து திருக்குறிப்புத்தொண்டர் அவரைப் பணிந்து எழுந்தார். அவர் மேனி மிகவும் மெலிந்திருப்பதைக் கண்டு, "தேவரீர் திருமேனி இவ்வளவு இளைப்பதற்குக் காரணம் என்ன ?" என்று அன்புடன்

இறையவனே என்றும் ஏழைக் கருள்பவனே
மறையவனே காக்களனே வாராயுன் அடைக்கலமே.

வினவினர். பின்பு அவர் இடையில் அணிந்த கந்தை ஒரே கறுப்பாய் அழுக்குப் படலம் போர்த்திருந்ததைக் கண்டு, "சுவாமி, இந்தக் கந்தையைத் தாருங்கள். நன்ருக வெளுத்துத் தருகிறேன்" என்று பணிவுடன் கூறினர்,

"இதையா கேட்கிறீர்? இது அழுக்காகத்தான் இருக்கிறது. ஆனாலும் இதுதானே எனக்குக் கவசம். ராத்திரி காலங்களில் இதுவே எனக்குப் போர்வை. இதைக் கொடுத்து விட்டால் நான் கோவணத்தோடுதான் இருக்க வேண்டும். ஆனல்......"

அவர் சற்றே யோசித்தார். பிறகு, "இதை வெளுத்துத் தருகிறேன் என்று சொல்கிறீர்கள். ஆனல் இன்று சூரியன் மலைவாயில் விழுவதற்குமுன் இதை வெளுத்து உலர்த்தித் தரவேண்டும்" என்ருர்.

"அப்படியே தந்து விடுகிறேன்" என்று திருக் குறிப்புத் தொண்டர் கூறினர். எப்படியாவது அந்தப் பெருமானுக்குத் தம்மால் இயன்ற தொண்டைச் செய்ய வேண்டுமென்பது அவர் ஆசை.

அடியவர் மறுபடியும், "இன்று சூரிய அஸ்தமனத்துக்குள் நிச்சயமாகத் தந்துவிடவேண்டும். இல்லாவிட்டால் ராத்திரி என்னல் குளிரைத் தாங்க முடியாது. பிணம் போல விறைத்துப் போகவேண்டியதுதான். அப்படியானல் நீரே பொறுப்பாளி" என்று சொல்ல, "நிச்சயமாக மாலைக்குள் வெளுத்து உலர்த்தித் தருகிறேன்" என்று திருக் குறிப்புத் தொண்டர் சொன்னர். சில நாளாக மழை நின்று வெயில் காய்ந்தபடியால் அன்று மாலைக்குள் அதை உலர்த்தித் தந்துவிடலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

எளியேன் இடரனைத்தும் இன்றே ஒழிந்திடவே
அளியே னுளம்கோயில் ஆக்குவையுன் அடைக்கலமே.

அடியார் தம் கந்தையைத் தொண்டரிடம் கொடுத்துச் சென்றார். உடனே அந்தக் கந்தையைத் திருக்குறிப்புத் தொண்டர் நீர்த்துறைக்குச் சென்று அதைத் தோய்த்தார். வெள்ளாவியில் வைத்தார். பிறகு அதைப் பிரித்து வெளுக்கலானார். அதற்குள் பிற்பகல் வந்துவிட்டது. அதோடு சோதனையாக மழையும் வந்துவிட்டது. இறைவன் செய்த சோதனை தான்!

வானமெல்லாம் மேகங்கள் கப்பிக்கொண்டன. மழை பலமாகப் பெய்கிறது. அதைக்கண்ட போது திருக்குறிப்புத் தொண்டர் உள்ளத்தே இடி இடித்தது. 'இந்த மழையில் நான் எப்படி ஆடையை உலர்த்தித் தருவேன்!' என்று வருந்தினார். "இன்னும் சிறிது நேரத்தில் வானம் வெளி வாங்கலாம்" என்று எண்ணினார். அவரைச் சோதிப்பதற்காகவே வந்த மழை அது. அப்படி இருக்கும்போது அது எளிதில் நிற்குமா? மழை நிற்கவில்லை. பொழுது போய்க்கொண்டே இருந்தது; தொண்டருடைய முகத்தில் ஒளி மாழ்கியது. அவர் உள்ளத்தில் புயல் புகுந்தது. "ஐயோ! முன்பே இதை வெளுத்துக்கொண்டு போய் வீட்டில் காற்றுடக் கட்டி உலர்த்தி யிருக்கலாமே? அப்படிச் செய்யாமல் முட்டாள்தனமாகக் காத்திருந்தேனே! அந்தப் பெரியார் வந்தால் நான் என்செய்வேன். அவர் திருமேனி வெடவெட வென்று நடுங்குமே! இந்தப் பாவி, அவர் உடம்பு நடுங்கக்கண்டு மரம்போல நிற்பதா?" என்று அவர் நைந்தார். "அவர் முகத்தில் நான் எப்படி விழிப்பேன். அழுக்குக் கந்தையாக இருந்தாலும் குளிர் தாங்குமே! நான் பாவி அதைப் பிடுங்கி வைத்துக்கொண்டு, வெளுத்துத் தருகிறேன் என்று வீரம் பேசினேனே!' என்று சாம்பினார். "அவர் வருமுன் நாம் உயிர் விடுவதே சரி" என்று துணிந்து துணி வெளுக்கும் பாறையில் தம் தலையை மோதிக்கொள்ளப் போனார்.

அன்னம் சொன்னம் வேண்டி அடியேன் அலையாமல்
பொன்மயிலூர் நீயென்னுளம் புகுவாய் அடைக்கலமே.

சோதனை செய்த அருளாளனாகிய ஆண்டவன், தன் பிள்ளை அச் சோதனையில் வெற்றி பெற்றுவிட்டான் என்று கண்டான். அடியார் உள்ளம் புண்படுவதைக் காண்பதற்கு முன் உயிரையே விட்டுவிடும் துணிவை உணர்ந்தான். அவனுடைய மலர்ச்செங்கை பாறையினின்றும் எழுந்து திருத்தொண்டர் தலையைத் தாங்கியது. பல காலமாகப் பல தொண்டர்களுடைய ஆடையை வெளுத்த அப்பாறை, திருக்குறிப்புத் தொண்டருடைய அரும்பெருந் தொண்டுக்கு நிலைக்களமாக இருந்த அப்பாறை இப்போது இறைவன் திருக்கரம் எழும் அற்புத ஆலயமாகிவிட்டது. சிரம் மோதப் புகுந்த தொண்டரின் எண்ணம் நிறைவேறவில்லை. இறைவன்கரம் அதைத் தடுத்தது.

மேகங்கள் மறைந்தன. வானம் வெளிவாங்கியது. அவ்வானத்தே விடைமேல்எழுந்தருளினான்சிவபெருமான். உமாதேவியாரோடு கோலங் காட்டிய பெருமானைக் கண்டு உருகித் தொழுது நின்றார் தொண்டர். அப்போது இறைவன், "உலகம் முழுதும் உன்னுடைய திருத்தொண்டின் பெருமையை உணர்ந்து கொள்ளும்படி அறிவித்தோம்; நீ நம்முடன் இருந்து இன்புறுவாயாக" என்று அருள் புரிந்தான்.

ஆந்திர நோன்புக் கதைகள்.

(கருடபஞ்சமி)

"மஹி"

(ஆந்திர அரசு தமிழ்நாட்டில் கோலோச்சி வந்த காலத்தில் அவர்களுடைய ராஜ்ய அலுவல்களைக் கவனிப்பதற்காகத் தங்கள் நாட்டிலிருந்து பல குடும்பங்களைத் தமிழ் நாட்டிற்குக் குடியேற்றினார்கள். அதைத் தொடர்ந்தும் பல ஆந்திரக் குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியேறி தமிழ் நாட்டின் ஒரு பகுதியினராகவே ஆகிவிட்டார்கள். வீட்டில் பேசும் கொச்சைத் தெலுங்கைத் தவிர வேறுலிபிகூட அறி

யாமல், மொழி, கல்வி, பண்பாடு, நாகரீகம், கலை முதலியவைகளில்கூட முற்றும் தமிழ் மணமே வீச, வாழ்ந்து வரும் குடும்பங்கள் இன்றும் தமிழ் நாட்டில் நிறையப் பல கோடி இருக்கின்றன. அவர்கள் எல்லாம் தமிழராகவே ஆகிவிட்டாலும் இன்னம் வருடம் பூராவிலும் நெடுக வரும் பண்டிகை, நோன்பு முதலியவைகளில் மாத்திரம் தங்கள் பத்ததியைக் கையாண்டு, நோன்புக் கதைகள் சொல்லி நோன்பு நோற்று வருகிறார்கள். அவைகளில் பக்தியின் சக்தி வெளிப்படுவதால் அவைகளை வரிசையாக எழுதத் திட்டம். திருவருள் தொடர்ந்து எழுத அருள வேண்டும்)

ஏழு சகோதரர்களுக்கு இளையவளாகப் பிறந்த எல்லம்மா, செல்வ மகள்தான். ஏழு ஆண்பிள்ளைகளுக்குப் பின்னர் பிறந்த பெண், பெற்றோர்களாலும், சகோதரர்களாலும் மிகவும் நேசிக்கப்பட்டு வந்தாள். அவர்கள் தங்கள் உயிரையே எல்லம்மாளிடம் வைத்திருந்தார்கள். எந்தப் பொருளைக் கொடுத்தாலும் உடன் மற்றொன்று கிடைக்க வேண்டுமல்லவா? முன்கையுடன் சேர்ந்தே முழங்கையும் நீளத்தானே வேண்டும்? பெற்றோர்களிடமும், சகோதரர்களிடமும் பெற்ற அன்பை அத்தனை மடங்காகத் திருப்பிச் செலுத்தி வந்தாள் எல்லம்மாள்.

கழனிகளில் கடும் உழைப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கும் சகோதரர்கள் எழுவருக்கும், நடுப்பகலில் கஞ்சி கொண்டுபோய்க் கொடுக்கும் பணியை ஆனந்தத்துடன் மேற்கொண்டாள் எல்லம்மாள். கடும் வெய்யிலில் தவித்தாலும் தன் சகோதரர்களுக்கு உணவு எடுத்துச் செல்லுகிறோம் என்ற பூரிப்பில் தயங்காது நடப்பாள் அவள்.

வழக்கமாக அப்படிப் போய்க் கொண்டிருக்கையில் ஒருநாள், எல்லம்மாள் கொணர்ந்த பகலுணவை—கஞ்சியை—இன்பமுடன் வாங்கியுண்ட சகோதரர்கள் எழுவரும் ஒருவர்பின் ஒருவராக மயக்கமுற்று விழுந்ததைக் கண்டதும், அன்புச் சகோதரியின் மனம் சும்மா இருக்குமா? என்ன காரணம் என்று புரியவில்லை. அழுதாள் அல

ணுறிள். புரண்டாள். அண்ணன்மார்களின் சடலத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். ஊஹூம்! மூச்சே இல்லே. முகம் வெளிறிக் கண்களில் நீலம் படர்ந்திருந்தது. சரி தான் விஷந்திண்டிதான் இறந்து விட்டார்கள் என்று ஊர் ஜிதமாகிவிட்டது.

விஷம் எப்படித் திண்டியது? கஞ்சிக் கலயத்தைப் பார்த்தாள். அடேடே! கலயத்திலுள்ள மீதமான கஞ்சி யிலும் லேசாக நீலம் படர்ந்திருந்தது! ஐயோ பாவி! என்னுல் அல்லவா என் அண்ணன்மார்கள் உயிர் இழந்து விட்டார்கள்" என்று சொல்லி ஆழ்ந்த துக்கத்தினுல் முகம் புதைத்து விசித்து அழுதாள்.

உண்மையான ஆழ்ந்த அன்புடன், உள்ளம் கசிந்து அழுத அவளுடைய அழுகை, வானில் உலாவிய தேவ தம்பதிகளின் காதுகளில் கேட்டது. தேவதம்பதிகள் கீழி றங்கிவந்து எல்லம்மாளின் துயரத்தைக் கேட்டறிந்தனர். காரணம் கேட்டுவிட்டுத் தாங்கள் அகநோக்கினுல் நடந் ததை உணர்ந்தறிந்தனர். அதாவது:—

"ஒருகருடன் தனது உணவுக்காக ஒரு கிருஷ்ண ஸர்ப் பத்தை பிடித்துத் தன்கால்களால் இறுகப் பற்றிக்கொண்டு வானில்பறந்து கொண்டிருந்த போது, கருடனின் பிடியின் வேதனே தாளாமல் கிருஷ்ண ஸர்ப்பம் விஷத்தைக் கக்கிக் கொண்டே போயிருக்கிறது. அந்த விஷத்தின் திவலே கஞ்சி யில்பட்டுதான் இவர்கள் இறந்து விட்டார்கள்" என்று.

இப்படி நிகழவேண்டியதன் காரணமும் அவர்கள் அறிந்தார்கள். கருடனுக்கும், நாகத்துக்கும் முறைப்படி செய்யவேண்டிய பூசைகளேச் செய்யத் தவறிவிட்ட காரணத் தினுல்எல்லம்மாளுக்கு இந்தத்துக்கம் நேரலாயிற்றுஎன்று.

ஆகவே! நாகத்துக்கும், கருடனுக்கும் முறைப்படி செய்ய வேண்டிய பூசைகளுக்கு ஏற்பாடாயிற்று

தேவதம்பதிகள் தங்கள் சக்தியினுல் அரசமரம், நாகர், பூசைப் பொருள்கள் முதலியவைகளே வரவழைத்து, எல்லம்மாளேக் கொண்டு முறைப்படி பூசை நடத்துவித்

தார்கள். பூசை முடித்து, பகவத் பிரஸாதத்தை சகோதரர்களுக்கு இட்டவுடன் துயில் நீத்து எழுந்தவர்களைப் போல எழுந்துவந்து, 'எல்லம்மா! இது என்ன பூசை? என்று வினவினார்கள். எல்லம்மாள் நடந்ததைச் சொன்னாள். அவர்களின் அன்பு இன்னும் இறுகியது. தூய்மையான சகோதர அன்பும் மரணத்தை எதிர்க்க முடியும் என்பதைக் கண்டனர்.

இது நடந்தது சாந்திர மானப்படி ச்ராவண பஹுள பஞ்சமியில். ஆகவே ஒவ்வொரு ஆந்திரப் பெண்ணும் அந்நாளில் தன்னுடைய சகோதரர்களுக்காக இந்த நோன்பை நோற்கிறாள். நோன்பின் இடையில் மேற்படி எல்லம்மாள் கதையையும் சொல்லித்தன் சகோதரனுக்கு புற்று மண்ணைப் பிரசாதமாக இடுகிறாள்.

இதேபோன்ற சகோதரர்களின் நோன்பு ஒன்று வங்காளிகளிடையேயும் இருந்து வருகிறது. அன்றைய தினம் ஒவ்வொரு வங்காளிப் பெண்ணும் தன் சகோதரனுக்கு மங்கல திலகம் இடுவது வழக்கம், ஆந்திரப் பெண்ணைப் போலவே.

THE RIVER AND THE OCEAN

In terms of the above title, the Upanishads compare the God-realised soul to a river that has flown into the ocean. The vital part of a river is the water that flows on its bed till it reaches the ocean. The surface water has no denomination. It flows as it listeth, the changing levels of the earth's surface determining its wayward movement. Shortly rivulets are formed and their waters reach the main river. Over the river, the waters can flow only on the bed, between the two banks. The river water here

acquires a name and habitation. But the restraint of the banks ceases when the waters flow on into the ocean. Even so, the individuality of human life is compared to the water of the river. So far as human life is concerned, there may not be two banks, but any number of them which a virtuous man is not permitted to transgress. Bounded on all sides by the dictates of virtue and right conduct, man is asked to tread on as a pilgrim. The pilgrim's progress ends when he reaches the centre towards which he was moving. Even so, when God-realisation is reached, human limitations drop. The waters of the river when they flow into the ocean, they lose their name. The banks are no more to be seen. They are no longer called this river water or that river water. They have the whole expanse of the ocean to roam about. They experience the joy of infinite being. Even so, the life that has reached its great destination, realises that there is but one life in all the world and in the immensity of the only life and its eternity, the limitations of human life disappear. Man becomes one with God. *Saint Pattinathar* therefore sang :—

கடல்நீரும் ஆறும்போல் கலந்துகரை காணேண்டி
உடலும் உயிரும்போல் உட்கலந்து நின்றாண்டி.

The "*I*" and "*Mine*" are lost. The integral unity with the Infinite is realised. Let us move and end like the river of separate existences merging ultimately in the realisation of the one and the only one Infinite Existence. Om Thath Sath.

—*Thiruppugal Mani*

பெரும்பொருட் கிடனும் பிரணவ வடிவிற்
பிறங்கிய வொருதனிப் பேறே

அரும்பொரு ளாகி மறைமுடிக் கண்ணே
அமர்ந்தபே ரானந்த நிறைவே

தரும்பர போக சித்தியும் சுத்த
தருமமும் முத்தியுஞ் சார்ந்து

விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Regd. M. No. 5390, Amirthavachani (1955 கார்த்திகை - அமிர்தவசனி)

Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd :—1924 Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்
குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி	1	0	0
" 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் "			
முருகனடியார் "			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.